



# ஆன்மாவின் வாழ்வைப் பற்றி பிரதிபலித்தல்

ரூஹி பயிற்சிக்கழகம்





நூல் 1

# ஆன்மாவின் வாழ்வைப் பற்றி பிரதிபலித்தல்

ரூஹி பயிற்சிக்கழகம்

## இத்தொடர்வரிசையில் வரும் நூல்கள்

ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்தத் தொடர்வரிசையில் உள்ள தலைப்புகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்களும் முதியவர்களும் தங்கள் சமூகங்களுக்குச் சேவை செய்வதற்கான திறனாற்றலை மேம்படுத்துவதற்குரிய ஒரு முறைமையான முயற்சியில் இந்த நூல்கள் பிரதான தொடர்வரிசையாகப் பயன்படுத்தப்படும். பஹாய் குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தொடர்வரிசையில் வரும் மூன்றாவது நூலின் கிளைப்பயிற்சித் தொகுப்பு ஒன்றை உருவாக்கி வருவதுடன், இளைய இளைஞர் குழுமங்களுக்கு எனிமேட்டர்களை உருவாக்குவதற்கு நூல் 5'இன் கிளை பயிற்சிகள் தொகுப்பு ஒன்றையும் ரூஹி பயிற்சிக்கழகம் உருவாக்கி வருகின்றது. அவையும் கீழ்காணும் பட்டியலில் குறிப்பிடப்படுகின்றன. களத்தில் அனுபவம் பெருகி, மேம்பாட்டில் உள்ள பாடத்திட்ட அம்சங்கள் பல விரிவாகக் கிடைக்கும் கட்டத்தை அடையும் போது இந்தப் பட்டியலும் மாற்றம் கண்டு, கூடுதல் தலைப்புகள் சேர்த்துக்கொள்ளப்படும்.

நூல் 1 ஆன்மாவைப் பற்றி பிரதிபலித்தல்
நூல் 2 சேவைக்காக எழுதல்
நூல் 3 சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 1
சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 2 (கிளை பயிற்சி)
சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 3 (கிளை பயிற்சி)
சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 4 (கிளை பயிற்சி)
நூல் 4 இரட்டை அவதாரங்கள்
நூல் 5 இளைய இளைஞர் சக்திகளை விடுவித்தல்
ஆரம்ப உந்தம்: நூல் 5'இன் முதல் கிளை பயிற்சி
விரிவடையும் வட்டம்: நூல் 5'இன் இரண்டாவது கிளை பயிற்சி
நூல் 6 சமயத்தைப் போதித்தல்
நூல் 7 ஒரு சேவைப் பாதையில் ஒன்றாகப் நடப்பது
நூல் 8 பஹாவுல்லாவின் திருவொப்பந்தம்
நூல் 9 ஒரு வரலாறு சார்ந்த முன்னோக்கைப் பெறுதல்
நூல் 10 துடிப்பான சமூகங்களை நிர்மாணித்தல்
நூல் 11 லௌகீக வழிமுறைகள்
நூல் 12 (வரவிருக்கின்றது)
நூல் 13 சமுதாய நடவடிக்கையில் ஈடுபடல்
நூல் 14 (வரவிருக்கின்றது)

பதிப்புரிமை © 1987, 1994, 1999, 2007, 2020 - ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.
பதிப்பு 1.1.1.PP செப்டம்பர் 1994
பதிப்பு 4.1.3.PE நவம்பர் 2021
ISBN 978-958-59880-2-6

Originally published in Spanish as *Reflexiones sobre la vida del espíritu*
Copyright © 1987, 1995, 2008, 2020 by the Ruhi Foundation, Colombia
ISBN 978-958-59880-3-3

ரூஹி பயிற்சிக்கழகம்
காலி, கொலம்பியா
மின்னஞ்சல்: instituto@ruhi.org
வலைத்தளம்: www.ruhi.org

# உள்ளடக்கம்

பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்.......... i

பஹாய் திருவாசகங்களைப் புரிந்துகொள்ளுதல்.......... 1

பிரார்த்தனை .......... 15

வாழ்வும் மரணமும் .......... 34

# பயிற்றுநர்களுக்கான சில சிந்தனைகள்

ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வழங்கப்படும் பிரதான வரிசைத்தொடரின் முதல் நூல் *'ஆன்மாவின் வாழ்வைப் பற்றி பிரதிபலித்தல்'* ஆகும். உலகம் முழுவதும் அது குறித்த பயிற்சி நடைபெறும் உள்ளூர்களின் எண்ணிக்கை பல வருடங்களாக உயர்ந்துகொண்டே வருகின்றது. மிகப் பெரும்பான்மையான சூழல்களில், தீவிர பயிற்சிக்காக ஏற்பாடு செய்யப்படும் ஒரு பரப்பியக்கத்தில் வாடிக்கையாக ஒன்றுகூடும், அல்லது பள்ளி விடுமுறைகளின் போது ஒரு முகாமில் ஒன்றுகூடும், ஒரு படிப்பு வட்டம் எனப்படும் நண்பர்கள் குழுமத்தினால் இந்த நூல் படித்து கலந்துரையாடப்படுகின்றது. அந்த நிகழ்வு எதுவாக இருப்பினும், அந்த குழுமத்திலுள்ள உறுப்பினர் ஒருவர் பயிற்றுநராகச் செயல்படுவார். பயிற்றுநருக்கும் பிற பங்கேற்பாளர்களுக்கும் இடையிலான உறவு ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான உறவைப் போன்றதல்ல; அனைவருமே கற்றலை நாடுகின்ற ஒரு செயல்முறையில் விழிப்புணர்வுடன் ஈடுபடுகின்றனர். ஆனால், பயிற்றுநர் கலந்துரையாடலில் பற்றோ ஈடுபாடோ இல்லாத ஒரு வழிநடத்துனரும் அல்ல. வரிசைத்தொடரில் போதுமான அளவு பயிற்சிகளை முடித்து, அவை ஊக்குவிக்கும் சேவை செயல்களை மேற்கொண்டுள்ள பயிற்றுநர், பயிலப்படும் உபகரணத்தின் நோக்கத்தை அடைவதற்குக் குழுமத்தில் உள்ள ஒவ்வோர் உறுப்பினருக்கும் உதவ முடிகிறது. நூல் ஒன்றின் பயிற்றுநராக செயல்படுவோர், இந்த அறிமுகத்தில் வழங்கப்பட்டுள்ள யோசனைகளை அவ்வப்போது மீள்பார்வையிடுவது பயனுள்ளதாக இருந்திடக் காணலாம்.

உலகளாவிய நிலையில், பயிற்சிக்கழகத்தின் இந்த முதல் பயிற்சிக்குப் பலவகையான பின்னணிகளிலிருந்து பங்கேற்பாளர்கள் வருகின்றனர். அவர்களுள் சிலர் ஏற்கனவே பஹாய் சமூகத்தின் உறுப்பினர்களாக இருப்பர் என்பதுடன், தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள சமயத்திற்குச் சேவை செய்வதற்காகத் தங்களின் திறனாற்றலை வளர்த்துக்கொள்ள விரும்புவோராகவும் அவர்கள் இருப்பர்; மற்றவர்கள், பஹாய் சமயத்தை ஒரு சமயம் எனும் முறையில் அதை ஆராய்வதற்கு இப்பயிற்சியை ஒரு முதல் படியென காண்பர். வேறு சிலரோ, பஹாய் இலட்சியங்களின்பால் ஈர்க்கப்பட்டு, பஹாய் சமூகத்தின் குறிக்கோள்களுடனும் முனைவுகளுடனும் தங்களைப் பரிச்சயப்படுத்திக்கொள்ள விரும்புவோராக இருப்பர். சமூகத்திற்குச் சேவை செய்வதற்கான திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோரின் எண்ணிக்கை, குறிப்பாக இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்கள் பெரும்பாலும் பஹாய் சமூகத்தால் ஊக்குவிக்கப்பட்ட ஒன்று அல்லது மற்றொரு திட்டத்தின் மூலம் தங்களின் சேவையை ஆரம்பிப்பதற்குப் பயிற்சியை முதல் படியாக எடுத்துக்கொள்கிறார்கள்.

ஆரம்பத்திலிருந்தே, நாம் ஒவ்வொருவரும், மற்றவர்களுக்கு உதவுவதுடன் பிறரால் நாமும் உதவப்பட்டு, ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிகள் தடம் போடவிருக்கும் மானிடத்திற்கான ஒரு சேவை பாதையில் நமது சொந்த வேகத்தில் நாம் பயணிக்கவிருக்கின்றோம் என்பதில் பங்கேற்பாளர் ஒவ்வொருவரும் தெளிவாக இருக்க வேண்டும். இந்தப் பாதையில் நடப்பதென்பது இரட்டை தார்மீக நோக்கம் பின்தொடரப்படுவதை உட்குறிக்கின்றது: ஒன்று, ஒருவரின் சொந்த ஆன்மீக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் கவனம்; மற்றொன்று சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிப்பது. இப்பாதையில் அடையப்பட வேண்டிய மேம்பாடு பல செயல்திறன்களைக் கோருகின்றது. அச்செயல்திறன்கள் புரிதலையும் அறிவையும், ஆன்மீகப் பண்புகளையும் பாராட்டுக்குரிய மனப்பான்மைகளையும், அதோடு அதிகமான திறன்களையும் திறமைகளையும் கோருகின்றன. ரூஹி பயிற்சிக்கழகத்தின் நூல்கள் அவற்றின் அறிவுக்கான மூலாதரங்களை ஒருபுறம் பஹாய் சமய போதனைகளிலிருந்தும், மறுபுறம் லௌகீக மற்றும் ஆன்மீக நாகரீகத்தை மேம்படுத்துவதில் உலகளாவிய பஹாய் சமூத்தின் குவிந்து வரும்

அனுபவங்களிலிருந்தும் ஈர்க்கின்றன. நாம் என்னவாக முடியும் என்பது குறித்த பஹாவுல்லாவின் தொலைநோக்கு, நாம் நிர்மாணிக்கும் நாகரீகம் ஆகிய இரண்டுந்தான் பயிற்சிக்கழகத்திற்கு உத்வேகமூட்டுகின்றன. தங்களின் பின்னணிகளைக் கருதாமல் எல்லா பங்கேற்பாளர்களும், ஒவ்வொரு நூலின் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் வெளிப்படையாகவுள்ள இந்தத் தொலைநோக்கை அரவணைத்திட விருப்பமுள்ளவர்களாக இருப்பர் என அனுமானிக்கப்படுகின்றது.

மதங்களும் சித்தாந்தங்களும் பற்றாளர்களை வெல்வதற்கு எப்படிப்பட்ட வழியையும் பயன்படுத்தத் தயாராக இருக்கும் ஓர் உலகில், சமயத்தைப் பற்றி அறிமுகமில்லாத ஒருவர் மனதில், ரூஹி பயிற்சிக்கழகத்தின் நோக்கங்கள் குறித்த உண்மையான கேள்விகள் எழலாம்; குறிப்பாக, “எனது மதத்தை மாற்றும்படி நான் கோரப்படுகிறேனா?” அல்லது “ஒரு மதத்தில் சேரும்படி நான் அழைக்கப்படுகின்றேனா?” என்பன. இது போன்ற கேள்விகள், மேலே வரையறுக்கப்பட்டுள்ள பயிற்சி வரிசைத்தொடரின் நோக்கத்தை விளக்குவதற்குப் பயிற்றுநர்களுக்கு ஒரு வாய்ப்பினை அளிக்கின்றன. தங்களின் நண்பர்கள் பஹாய் சமூகத்தில் சேர்ந்துகொள்வதை பஹாய்கள் விரும்புவது இயல்பே எனும் அதே வேளை, அவர்கள் எவ்வித கட்டாய மதமாற்ற நடவடிக்கைகள் ஈடுபடுவதையும் தங்களின் சமய போதனைகள் தடைசெய்கின்றன என்பதைப் பயிற்றுநர் தமது குழுமத்திற்குத் தெரிவித்திட விரும்பலாம். பயிற்சிக்கழகத்தினால் திறந்துவிடப்படும் சேவை பாதையில் நடப்பதற்கு பஹாவுல்லாவின் போதனைகளில் தொடர்ந்து ஆழப்படும் புரிதல் தேவைப்படுகின்றது; இதைச் சந்தேகமற முன்வைத்திட ரூஹி உபகரணங்கள் முனைகின்றன; ஏற்பிசைவும், சமயநம்பிக்கையும் ஒவ்வொரு தனிநபரினாலும் எவ்வித அழுத்தமும் இன்றி கருதப்பட வேண்டும்.

பின்னர், வரிசைத்தொடரில் உள்ள எல்லா நூல்களுக்கும் நடுமையத்தியிலுள்ள, புரிதல் குறித்த விஷயத்துடன் இந்த முதல் நூல் ஆரம்பிக்கப்படுவதில் வியப்பொன்றுமில்லை. திருவாக்குகளிலிருந்து படிப்பதென்பது, ஒருவர் தமது வாழ்நாளில் காணும் ஆயிரக்கணக்கான பக்கங்களைப் படிப்பதற்குச் சமமான ஒன்றல்ல; “பஹாய் திருவாக்குகளைப் புரிந்துகொள்ளுதல்” எனும் பாடப்பிரிவு அனுதினமும் திருவாக்குகளிலிருந்து உரைப்பகுதிகளைப் படிக்கும் பழக்கம், அவற்றின் அர்த்தம் குறித்து பிரதிபலிப்பது ஆகியவற்றைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது; இந்தப் பழக்கமானது, பங்கேற்பாளர்கள் தங்களின் சேவை பாதையில் பயணிக்க ஆரம்பிக்கும் போது அவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். அதன் பயில்வில் அவர்களுக்கு வழிகாட்டிட பயிற்றுநர், புரிதல் எனும் கருப்பொருள் மீது பேரளவு சிந்தனை செலுத்த வேண்டும்.

பஹாய் திருவாக்குகள் ஆழ்ந்த ஆன்மீக உண்மைகளை உள்ளடக்கியுள்ளன; அவற்றின் எல்லையற்ற அர்த்தம் குறித்த புரிதலில் நாம் மேம்பாடு காண முயலும் போது, அதில் நாம் ஓர் முடிவான அர்த்தத்தை அடையவே முடியாது என்பது நமக்குத் தெரியும். பொதுவாக, ஒரு பத்தியை முதன் முறையாகப் படிக்கும்போது, அதன் உடனடி அர்த்தம் குறித்த ஓர் அடிப்படை புரிதலை நாம் பெறுகின்றோம்; பாடப்பிரிவின் முதல் பகுதி இதனை ஒரு தொடக்க நிலையாக எடுத்துக்கொள்கின்றது. ஆதலால், “உலகின் சீர்திருத்தமானது, தூய்மையான மற்றும் நற்செயல்களின் மூலமும் மெச்சத்தகுந்ததும் பொருத்தமானதுமான ஒழுக்கத்தின் மூலமும் சாதிக்கப்படக் கூடும்,” எனும் மேற்கோளைப் படித்த பின், “உலக சீர்திருத்தம் எவ்வாறு சாதிக்கப்படக் கூடும்?” என பங்கேற்பாளர்களிடம் ஓர் எளிமையான கேள்வி கேட்கப்படும். மேலோட்டத்தில், இத்தகைய கேள்விகளும் பயிற்சிகளும் பார்ப்பதற்கு மிகவும் எளிமையானவையாகத் தோன்றலாம். ஆனால், வருடக்கணக்கான அனுபவம், இவ்விதமாக ஆரம்பிக்கும் பயிற்சிக்கழகத்தின் முடிவை நியாயப்படுத்துவதாகவே தெரிகின்றது. ஒரு பத்தியில் உள்ள மெய்மையின் பல அடுக்குகளைக் கண்டறியும் அவசரத்தில், அதன் வெளிப்படையான அர்த்தத்தை நாம் புறக்கணித்திடக் கூடாது என்பதை நாம் நினைவில் நிறுத்திக்கொள்ள

வேண்டும். இந்த முதல் நிலை புரிதலுக்கு வழங்கப்படும் கவனமானது குழு கலந்துரையாடலுக்கு இன்றியமையாததாக இருந்திடக் காணலாம்; சுய கருத்துகள் தெய்வீக விவேகத்தினால் ஒளியூட்டப்பட அனுமதிக்கப்படும்போது, சுலபத்தில் அடையப்படக் கூடிய சிந்தனா ஒற்றுமையை அது பலப்படுத்துகின்றது.

பெரும்பாலான பத்திகளின் உடனடி அர்த்தத்தைப் புரிந்துகொள்வது சூழலுக்கு வெளியே தனி சொற்களைப் பற்றிய நீண்ட கலந்துரையாடலினால் பயனடையாது என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். ஆயினும், சில சமயங்களில் ஒரு குழுமத்தினர் ஒரு வார்த்தையின் பொருளை அகராதியில் தேடவேண்டியிருக்கும். எவ்வாறாயினும், பங்கேற்பாளர்கள் முழு வாக்கியங்களிலிருந்தும் பத்திகளிலிருந்தும் சொற்களின் அர்த்தங்களை எவ்வாறு யூகிப்பது என்பதைக் கற்றுக்கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

உடனடி அர்த்தம் என்னும் தளத்திற்கும் அப்பால், யோசனைகள் எவ்வாறு ஆணித்தர வெளிப்பாடுகளைக் காண்கின்றன என்பதற்கான உதாரணங்கள், புரிதல் விரிவடைவதற்கு உதவிடும். இந்த விஷயத்தில் நேரடி பயிற்சிகளே கோரப்படுகின்றன. உதாரணத்திற்கு, பகுதி 2'இல், அவர்கள் அப்போதுதான் படித்துள்ள ஒரு பத்தியின் அடிப்படையில் குறிப்பிட்ட சில பண்புக்கூறுகள் பாராட்டுக்குரியவையா என்பதை பங்கேற்பாளர்கள் தீர்மானிக்கும்படி கோரப்படுகின்றனர். பகுதி 4'இல் அதே போன்ற ஒரு பயிற்சியில், ஐந்து நற்பண்புகளைக் குறிப்பிடும்படி பங்கேற்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்; பின்னர்—திருவாக்குகளில் "எல்லா மனித நற்பண்புகளுக்கும் அஸ்திவாரம் என வர்ணிக்கப்படும்—வாய்மை இன்றி அவற்றை அடைய இயலுமா என தீர்மானிக்கும்படி கோரப்படுகின்றனர்.

பாடப்பிரிவு அதன் நோக்கத்தை அடைவதற்கு, வழங்கப்பட்டுள்ள பத்திகளின் சில தாத்பரியங்கள் பற்றி சிந்திக்குமாறு பங்கேற்பாளர்களுக்குச் சவால் விடுப்பதன் மூலம் புரிதலில் மேலும் மேம்பாடு காண கோரிக்கை விடுக்கின்றது. பகுதி 2'இல், "உலகில் வெகு சில நல்லவர்களே இருப்பதால் அவர்களின் செயல்கள் எவ்வித நல்ல விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை," எனும் கூற்று உண்மையா என்பதைத் தீர்மானிக்கும்படி அவர்கள் கோரப்படுகின்றனர். வெறும் கருத்தை மட்டும் வெளிப்படுத்துதல் இங்கு நோக்கமல்ல. இங்குப் பயிற்றுநர் சற்று நிறுத்தி, பங்கேற்பாளர்களின் பதில்களுக்கான காரணத்தை வினவ வேண்டும். கூற்று முன்னைய பகுதியின் முதல் மேற்கோளுக்கு எதிர்மாறாக இருக்கின்ற காரணத்தினால் அது நிச்சயமாகத் தவறாக இருக்க வேண்டும் என்ற முடிவிற்கே குழுமம் வர வேண்டும். பஹாய்கள் தங்கள் பாவங்களை மற்றவர்களிடம் ஒப்புக் கொள்ளலாமா என்ற கேள்வியும் இந்த வகையான பயிற்சியின் ஓர் உதாரணமாகும். போதனைகளில், பாவத்தைப் போக்குவதற்கு ஒரு வழியாக பாவமன்னிப்பு கோருதலுக்கு எதிரான தடையை இது குறிக்கின்றது. படிக்கப்பட்ட எந்தப் பத்தியிலும் இது வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை, எனினும் அது "மொத்தக் கணக்குப் பார்க்க அழைக்கப்படுவதற்கு முன் உனது ஒவ்வொரு நாளைய செயலையும் கணக்கிட்டுக்கொள்வாயாக," எனும் வாசகத்தின் பொருளை ஆராய்வதன் மூலம் வெளிக்கொணரப்படலாம்.

பரிசீலிக்கப்படும் பத்திகளில் உள்ளடங்கியுள்ள அர்த்தங்களின் நெடுக்கத்தை பாடப்பிரிவிலுள்ள பயிற்சிகள் எவ்வகையிலும் உள்ளடக்கிட முயலவில்லை. எந்தவொரு பயிற்சிக்கும் எவ்வளவு விவாதம் தேவைப்படும் என்பது ஒவ்வொரு பயிற்றுநரும் சிந்திக்க வேண்டிய ஒரு கேள்வியாகும். தொடர்புள்ள ஆனால், புற கருத்தாக்கங்கள் பலவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவாதங்களை நீட்டிப்பது உபகரணத்தின் விளைவுத்திறத்தைக் குறைத்திடக்கூடும் என்பதை மனதில் கொள்வது இங்கு முக்கியமாகும். ஒவ்வொரு குழுமமும்

முன்னேற்றம் குறித்த ஒரு நியாயமான இலயத்தை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டும்; தங்களின் சுய சாத்தியங்களுக்கு ஏற்ப சீராக மேம்பாடு காண்கின்றனர் எனும் ஒரு குறிப்பான உணர்வைப் பங்கேற்பாளர்கள் பெற வேண்டும். இருப்பினும், ஒவ்வொரு பகுதியும் பங்கேற்பாளர்களால் விரைவாகவும் மேலோட்டமாகவும் பூர்த்தி செய்யப்படக் கூடாது என்பதிலும் பயிற்சிகள் சிந்தனையோடு பகுப்பாய்வு செய்யப்படுவதிலும் பயிற்றுநர்கள் கவனமாக இருக்க வேண்டும்; இவ்வழியில், வெறுமனே பதில்களை மட்டும் நிரப்பிய குழுமங்கள், நீடித்த நல்விளைவுகளை எட்டியதில்லை.

இறுதியாக ஒரு விஷயம் இங்குக் குறிப்பிடப்பட வேண்டும்: உபகரணத்தால் பேணப்படும் கற்றல் செயல்முறையில் குழுமத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஈடுபட்டிருப்பதை உறுதி செய்யும் பொறுப்பு பயிற்றுநரைச் சார்ந்ததாகும். பேச வேண்டுமென எந்தவொரு தனிநபருக்கும் அழுத்தங் கொடுக்காமல் பங்கேற்பை ஈட்டுவதே பெரும்பாலும் சவாலாக இருக்கின்றது. “இதில் உங்களுக்கு என்ன பொருள்படுகின்றது?” என கேள்விகள் கேட்பதன் மூலம் இந்த சவால் எதிர்கொள்ளப்படுவது கடினம் என்பது ஆரம்பத்திலிருந்தே உணரப்பட வேண்டும். இவ்வித கேள்விகள், அறிவையும் உண்மையையும் ஓர் அபிப்பிராயத்தின் நிலைக்கு தரம் குறைத்திடக்கூடும். பின்னர், குழும உறுப்பினர்களிடையிலான கலந்தாலோசனையின் போது அவர்களுள் அதிகரித்த புரிதலை உருவாக்கும் ஒரு சூழலை உண்டாக்குவது உண்மையில் கடினமாகிவிடும்.

நூலின் முதலாவது பாடப்பிரிவைப் போன்றே, இரண்டாம் பாடப்பிரிவும் ஆன்மீக வாழ்விற்கு இன்றியமையாத பழக்கமான, அனுதினமும் பிரார்த்திப்பது என்பதன் மீது அக்கறை செலுத்துகின்றது. அஃது அதன் தொடக்கப் பகுதியில் “சேவை பாதை” குறித்த கருத்தாக்கத்தை வெளிப்படையாக்கி, இந்தப் பாதையில் நடப்பதற்கு நாம் இரட்டை நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என அது பரிந்துரைக்கின்றது. இந்த நோக்கத்தின் இயல்பு குறித்த நுண்ணறிவை வழங்கும் மேற்கோள்களின் ஓர் ஆரம்பத் தொகுப்பைப் பங்கேற்பாளர்கள் ஆய்வு செய்கின்றனர். எதிர்கால பயிற்சிகளில் இந்த நோக்கம் விரிவுபடுத்தப்படும் ஒரு கருப்பொருளாக இருக்கும்.

இக்கருப்பொருளின் பின்னணியில், பிரார்த்தனையின் முக்கியத்துவம் குறித்த புத்தாய்வை பாடப்பிரிவு மேற்கொள்கின்றது. முன்சென்ற பத்திகளில் வர்ணிக்கப்பட்டது போன்ற ஓர் அணுகுமுறையை அது பயன்படுத்துகின்றது. திருவாக்குகளிலிருந்து ஆய்வு செய்யப்படும் பத்திகளின் அர்த்தம் குறித்த புரிதலை மேம்படுத்திக்கொள்ளும் விதத்தில் கேள்விகளும் பயிற்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன. குழுமம், பாடப்பிரிவில் மேம்பாடு காணும் போது, பயிற்றுநர் கடந்தகால வியாக்கியானங்கள் மற்றும் நடைமுறைகளில் வேரூன்றியுள்ள எண்ணங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் சந்தேகங்களைக் களைந்திடுவது அவசியமாக இருக்கும். சில மரபுகளில், அகநிலையின் முக்கியத்துவத்தைச் சடங்குகளும் வெளிவடிவங்களும் படிப்படியாக மறைத்துள்ளன; அவற்றுள் பல, உடலுக்கு உணவின் முக்கியத்துவத்தைப் போன்றே, மனித ஆன்மாவுக்கு முக்கியத்துவத்தில் எவ்வகையிலும் குறையாத பிரார்த்தனையின் அவசியத்தைப் புறக்கணித்துள்ளன.

யாவற்றுக்கும் மேலாக, “கடவுளுடன் தொடர்புகொள்ளுதல்,” அவர்பால் அணுக்கமுறுதல் ஆகியன குறித்துப் பங்கேற்பாளர்களுள் ஓர் ஆவலை தட்டியெழுப்ப பாடப்பிரிவு முயல்கின்றது. ஒரு பிரார்த்தனை நிலையை அடைவது என்பதன் அர்த்தம் என்ன, அவ்வாறு செய்யும் போது நமது இதயம், மனம் ஆகியவற்றின் நிலைப்பாடு, நாம் தனியாக இருந்தாலும் ஒரு கூட்டத்தோடு இருந்தாலும் நம்மைச் சுற்றி உருவாக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் ஆகியன ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப யோசனைகளாகும். சமூக வழிபாடுகளின் மூலம் உருவாக்கப்படும் ஆற்றல்கள் குறித்து சிந்தித்த பிறகு, பிரார்த்தனைக்காகவும் வழிபாட்டிற்காகவும் ஓர் ஒன்றுகூடலை ஏற்பாடு செய்யும்படி பங்கேற்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நூலின் மூன்றாவது  பாடப்பிரிவின் படிப்பாய்வான, “வாழ்வும் மரணமும்” ஒரு சேவை பாதையில் நடப்பதற்கான ஈடுபாட்டை பலப்படுத்தி, அதற்கு மேலும் ஆழமான அர்த்தத்தை வழங்கிடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இந்த உலக வாழ்விற்கும் அப்பால் சென்று இறைவனின் உலகங்களினூடே நமது ஆன்மாக்கள் முன்னேற்றம் அடையும்போது வாழ்க்கையானது என்றும் நிலையாகத் தொடர்கின்றது. இந்த ஒட்டுமொத்த வாழ்வு குறித்த கருத்தின் அடிப்படையில்தான் இவ்வுலகில் சேவையானது சிறப்பாகப் புரிந்துகொள்ளப்படும். தொழில்நுட்ப பயிற்சிக்கு எதிர்மாறாக, ஒரு கல்வியல் செயல்முறையில், தாங்கள் என்ன செய்கின்றனர் என்பதன் அர்த்தம், முக்கியத்துவம் ஆகியன குறித்து பங்கேற்பாளர்கள் அதிகரித்த விழிப்புணர்வு பெற வேண்டும். இத்தகைய விழிப்புணர்வு அதிகரிக்கும்போது மட்டுமே, அவர்கள் தங்களின் சொந்த கற்றலில் ஆக்ககரமான, பொறுப்புள்ள “உரிமையாளர்களாக” தங்களைக் கண்ணுறக்கூடும் என அனுபவம் குறிக்கின்றது.

பாடப்பிரிவின் ஒவ்வொரு பகுதியும் பஹாய் திருவாக்குகளிலிருந்து ஒன்று முதல் மூன்று மேற்கொள்களுடன் ஆரம்பிக்கின்றது. இதைத் தொடர்ந்து சில பயிற்சிகள் வருகின்றன. இந்த பாடப்பிரிவில் மேற்கோளிடப்பட்டுள்ள பத்திகளின் மொழி, கடந்த இரண்டு பாடப்பிரிவுகளையும் விட சற்றுச் சவால்மிக்கதாகும்.  நிச்சயமாகவே, குழுமம் கடின வார்த்தைகளின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டியதில்லை; ஒவ்வொரு பகுதியிலும் உரைக்கப்படும் மைய கருத்தை ஒவ்வொருவரும் கிரகிப்பதைப் பயிற்றுநர் உறுதிப்படுத்திகொள்ள விரும்பலாம்; இதைத்தான் பயிற்சிகள் குறிப்பாக வெளிக்கொணர முயல்கின்றன.

ஆய்வுசெய்யப்படும் தலைப்பின் இயல்பைக் கருத்தில் கொண்டு, ஆணித்தரமான உதாரணங்களை உள்ளடக்கிய பயிற்சிகள் மிகச் சிலவே அவ்வப்போது வருகின்றன. பெரும்பாலானவை ஒரு கருத்தியல் மட்டத்திலேயே இயங்கிட முயல்கின்றன. பயிற்சிகள் முன்வைக்கும் சில கேள்விகள் விரைவாகவோ தெளிவான முறையிலோ பதிலளிக்கப்பட முடியாது என்பது கருத்தில்கொள்ளப்பட வேண்டும். அவை கருப்பொருள் பற்றிய விழிப்புணர்வை எழுப்புவதற்காகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன; பங்கேற்பாளர்கள் இத்தகைய கேள்விகளைப் பற்றி சிந்தனை மட்டும் செலுத்தினால் கூட கற்றல் குறிக்கோள் நிறைவேறிடும்.

முதல் பகுதிகள் பல, இவ்வுலக வாழ்வில் மனிதனை அமைக்கின்ற, ஆன்மாவுக்கும் உடலுக்கும் இடையிலான உறவின் மீது கவனம் செலுத்துகின்றன. இந்தப் பகுதிகளில் வழங்கப்படும் மைய கருத்து, ஆன்மா என்பது ஒரு பௌதீகப் பொருளல்ல என்பதாகும்; உடலுடனான அதன் தொடர்பை ஒரு கண்ணாடியில் தோன்றும் ஒளியுடன் ஒப்பிடலாம். கண்ணாடியின் மேல் படர்ந்திருக்கும் மாசோ, இறுதியில் அக்கண்ணாடி நொறுங்கிப் போவதோ அந்த ஒளியின் பிரகாசத்தைப் பாதிக்காது. உடலுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்படும்போது ஏற்படும் மரணம் ஒரு நிலை மாற்றம் மட்டுமே; அதைத் தொடர்ந்து ஆன்மா நித்தியகாலமும் தனது படைப்பாளரை நோக்கி பயணிக்கின்றது.

அடுத்த  பாடப்பிரிவு கடவுளை அறிதல் மற்றும் அவரது முன்னிலையை அடைதல் எனும் வாழ்வின் நோக்கம் பற்றிய கேள்வியின்பால் திரும்புகிறது. கலந்துரையாடல் இங்கு இரண்டு பரந்த கருப்பொருள்களைச் சுற்றி வலம் வருகிறது. முதலாவது, இவ்வுலகில் நமது வாழ்க்கையின் நோக்கம், இரண்டாவது மரணத்திற்குப் பிறகு ஆன்மாவின் பயணம். ஆன்மா இறைவனின் ஓர் அடையாளமாகும்; அது அவரது எல்லா நாமங்களையும் பண்புகளையும் பிரதிபலிக்கக் கூடியதுமாகும். இருப்பினும், மனிதனுக்குள் இருக்கும் இயலாற்றல் உள்ளுறையானது; காலத்திற்குக் காலம் மானிடத்திற்கு வழிகாட்டுவதற்காக வரும் புனிதர்களான, கடவுள்

அவதாரங்களின் உதவியோடு மட்டுமே அது மேம்படுத்தப்பட முடியும். அவர்கள் வழங்கும் ஆன்மீகக் கல்வியின் மூலமாக மட்டே, நம்முள் மறைந்திருக்கும் பொக்கிஷங்கள் வெளிப்படுத்தப்படும்.

மரணத்திற்குப் பின் ஆன்மாவின் பயணத்தைப் பொறுத்த வரை, பங்கேற்பாளர்களின் சிந்தனைக்கு ஒரு கருத்து வரிசை வழங்கப்பட்டுள்ளது: கடவுளுக்கு விசுவாசமாக இருப்போர் உண்மையான மகிழ்ச்சியை அடைவர்; நம்மில் எவருமே தனது இறுதிமுடிவை அறிந்துகொள்ள முடியாது; ஆதலால் நாம் ஒருவர் மற்றவரை மன்னித்திட வேண்டும், எவரையும்விட நாம் உயர்ந்தவர் என எண்ணக்கூடாது; இவ்வுலகைப் போன்றே அடுத்த உலகில், ஆன்மா தொடர்ந்து முன்னேற்றம் அடையும்; இவ்வுலகில் நாம் உருவாக்கிக்கொண்டுள்ள ஆன்மீக ஆற்றல்கள் அங்கு நம்மை ஆதரித்துத் துணைபுரியும்; மேலுலக இராஜ்யங்களில் நமது அன்புக்கினியவர்களைக் காண்போம், நமது இவ்வுலக வாழ்வை நினைவுகூர்வோம்; புனித, பரிசுத்த ஆன்மாக்களின் தோழமையை அனுபவிப்போம்.

பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து ஒரு பத்தியுடன் பாடப்பிரிவு ஒரு முடிவுக்கு வருகின்றது. அப்பத்தியில், அடுத்த உலகின் நன்மைகள் பற்றி உறுதியளிக்கப்பட்டு, இவ்வுலகின் மாற்றங்களும் சாத்தியங்களும் நமக்குத் துன்பம் தர அனுமதிக்கலாகாது என வலியுறுத்தப்படுகின்றோம். பின்னர், பங்கேற்பாளர்கள் தங்களின் சொந்த வாழ்க்கைக்கு அவர்கள் பயின்றவற்றின் தாத்பரியங்களைப் பற்றி பிரதிபலிக்குமாறு கோரப்படுகின்றனர்.



# பஹாய் திருவாசகங்களைப் புரிந்து கொள்ளுதல்

**நோக்கம்**

அனுதினமும் புனித வாசகங்களிலிருந்து
பத்திகளைப் படித்தல் மற்றும் அவற்றின் அர்த்தத்தின்
மீது பிரதிபலிக்கும் பழக்கத்தை பலப்படுத்தல்

## பகுதி 1

அனுதினமும் புனித வாசகங்களிலிருந்து பத்திகளைப் படித்து, அப்பத்திகளின் அர்த்தத்தின் மீது பிரதிபலிப்பதற்கான பழக்கத்தை உருவாக்கிக்கொள்தல், வலுப்படுத்தல், ஆகியவற்றில் உங்களுக்கு உதவுவதே இந்தப் பாடபிரிவின் நோக்கமாகும். திருவாக்கிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு வாக்கிய மேற்கோளைப் படிக்கக் கோரும் ஓர் எளிய பயிற்சியுடன் பாடப்பிரிவு ஆரம்பிக்கின்றது. பின்னர், அந்த மேற்கோளே பதிலாக அமையும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவீர். செய்வதற்கு இந்தப் பயிற்சி சுலபமாக இருப்பினும், குறிப்பிடப்படும் மேற்கோளின் அர்த்தத்தின் மீது பிரதிபலித்திடவும் அதை மனனம் செய்திடவும் அப்பயிற்சி உங்களுக்கு உதவிடும்.

**"உலகச் சீர்திருத்தமானது தூய்மையான மற்றும் நற்செயல்களின் மூலமும் மெச்சத் தகுந்ததும் மிகப் பொருத்தமானதுமான ஒழுக்கத்தின் மூலமும்தான் சாதிக்கபடக்கூடும்"[1]**

1. உலகச் சீர்திருத்தம் எவ்வாறு சாதிக்கப்படக்கூடும்? ____________________

____________________

____________________

**"பஹாவின் மக்களே! எவரது செயல்கள் சொற்களைவிட வேறுபடுகின்றனவோ அவர் வழியில் சென்றிடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள்.."[2]**

2. நாம் யாருடைய வழியில் செல்லக்கூடாது? ____________________

____________________

____________________

**"உருவின் புத்திரனே! மொத்தக்கணக்குப் பார்க்க அழைக்கப்படுவதற்குமுன் உனது ஒவ்வொரு நாளின் செயலையும் கணக்கிட்டுக்கொள்வாயாக."[3]**

3. மொத்தக் கணக்குப் பார்க்க அழைக்கப்படுவதற்குமுன் நாம் என்ன செய்யவேண்டும்?

____________________

____________________

____________________

**"கூறுவீராக: சகோதரர்களே! சொற்களையல்லாது செயல்களையே உங்கள் அணிகலனாகக் கொள்வீர்களாக."[4]**

4. நமது உண்மையான அணிகலன் எதுவாக இருக்க வேண்டும்? ____________________

____________________

____________________

**"புனித சொற்களும், தூய்மையான நற்செயல்களும் தெய்வீக ஒளிமிக்க சுவர்க்கத்தை நோக்கி உயர்கின்றன."[5]**

5. புனித சொற்களும் தூய்மையான நல்ல செயல்களும் எதை நோக்கி உயர்கின்றன? ________
________________________________________________________________________
________________________________________________________________________

## பகுதி 2

நீங்கள் இப்போது படித்துமுடித்துள்ள வாசகக் குறிப்புகளுடன் தொடர்புடைய பயிற்சிகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை உங்கள் குழுவில் பத்திகளின் முக்கியத்துவத்தைப் பற்றி மேலும் சிந்திக்க உதவும் நோக்கம் கொண்டவை. அவை இயந்திரத்தனமாகச் செய்யப்படக்கூடாது. அதற்காக ஒவ்வொரு பயிற்சிக்கும் நீண்ட கலந்துரையாடல் தேவை என்பது அர்த்தமல்ல. ஆயினும், பயிற்சி சிரமமானதாக இருக்கும்போது, உங்கள் குழுமத்தின் பயிற்றுநர் அதைத் தீவிரமாக ஆராய்ந்திட உதவிடுவார்.

1. ஒரு விஷயம் "பாராட்டத்தக்கது" என்றால் அது புகழ்ச்சிக்குரிய ஒன்றாகும். கீழ்கண்டவற்றில் பாராட்டத்தக்கவை எவை?

   ____ நல்ல ஊழியனாக இருப்பது
   ____ மற்றவர்களை மதிப்பது
   ____ ஆர்வத்துடன் கற்பவராக இருப்பது
   ____ பொய் சொல்பவராக இருப்பது
   ____ சோம்பேறியாக இருப்பது
   ____ மற்றவர்களுக்குச் சேவை செய்வது

2. "மொத்தக் கணக்கு பார்க்க அழைக்கப்படுவதற்கு முன்" என்பதன் பொருள் என்ன?
________________________________________________________________________
________________________________________________________________________

3. கீழ்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?
   ____ இவ்வுலகில் மிகச் சில நல்ல மனிதர்களே இருப்பதனால், அவர்களது செயல்கள் எவ்விதப் பயனையும் ஏற்படுத்துவதில்லை.
   ____ ஒரு செயல் மற்றவர்கள் கருத்துகளோடு ஒத்துவரும்போது அது சரியானதாக இருக்கும்.
   ____ ஒரு செயல் கடவுளின் போதனைகளுடன் ஒத்துவரும்போது சரியானதாக இருக்கும்.

4. கீழ்கண்டவற்றில் எவை தூய்மையான நல்ல செயல்கள்:

   ____ குழந்தைகளைப் பராமரித்தல், கல்வியளித்தல்
   ____ திருடுதல்

______ மற்றவர்களின் முன்னேற்றத்திற்காகப் பிரார்த்தனை செய்தல்
______ பிரச்சினையிலிருந்து மீள்வதற்காக ஒரு சிறு பொய்யைக் கூறுதல்
______ பிறருக்கு உதவி செய்துவிட்டு வெகுமதியை எதிர்பார்த்தல்

5. பின்வரும் சூழல்களில் எதில் ஒருவரின் சொற்கள் அவரது செயல்களிலிருந்து வேறுபடுகின்றன.

______ நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென ஒருவர் கூறி வருகிறார் ஆனால், முரண்பாடுகளை உருவாக்கும் விதத்தில் நடந்துகொள்கின்றார்
______ ஒரு கற்புநெறி தவறா வாழ்க்கையின் மதிப்பை பாராட்டும் ஒருவர் திருமணத்திற்கு வெளியே உடலுறவு வைத்துக்கொள்கிறார்.
______ ஒருவர் அவ்வப்போது மதுவருந்துகிறார், அதே சமயம் மதுவருந்துதலைத் தடை செய்யும் ஒரு சமயத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்கின்றார்.
______ ஒருவர் ஆண் பெண் சமத்துவத்தைப் போதிக்கின்றார் ஆனால், முதலாளி எனும் முறையில் ஆண்களைவிட பெண்களுக்குக் குறைவான ஊதியம் வழங்குகிறார்.

6. ஒரு பஹாய் மற்றவரிடம் பாவமன்னிப்புப் கோருதல் அனுமதிக்கப்பட்டுள்ளதா? ____________
______________________________________________________________________

7. பாவமன்னிப்புப் பெறுவதற்குப் பதிலாக நாம் என்ன செய்ய வேண்டும்? ____________________
______________________________________________________________________

8. "தெய்வீக ஒளிமிக்கச் சுவர்க்கம்" எனும் சொற்றொடரின் அர்த்தம் என்ன? __________________
______________________________________________________________________

9. தீய செயல்கள் உலகில் என்ன விளைவை ஏற்படுத்துகின்றன? _____________________________
______________________________________________________________________

10. தீய செயல்கள் அவற்றைச் செய்பவர் மீது என்ன விளைவை ஏற்படுத்துகின்றன? ___________
______________________________________________________________________

## பகுதி 3

இப்பொழுது திருவாக்குகளிலிருந்து வரும் பின்வரும் மேற்கோள்களைப் படித்துப் பிரதிபலிக்கவும். பின்னர் அவற்றை மனனம் செய்ய முயலவும்.

**"மனித நற்பண்புகள் அனைத்திற்கும் அஸ்திவாரம் வாய்மையே "[6]**

1. மனித நற்பண்புகள் அனைத்திற்கும் எது அஸ்திவாரம்? ______________________________________

________________________________________________________________________________

**"வாய்மையின்றி எந்த ஆன்மாவும் இறைவனின் அனைத்து உலகங்களிலும் முன்னேற்றமும் வெற்றியும் அடையவே முடியாது."[7]**

2. வாய்மையில்லாவிட்டால் எது அறவே இயலாது? ______________________________________________

________________________________________________________________________________

**"மக்களே! வாய்மையினைக் கொண்டு உங்கள் நாவுகளை அழகுப்படுத்துவீராக. நேர்மையெனும் ஆபரணத்தைக் கொண்டு உங்கள் ஆன்மாக்களை அலங்கரிப்பீராக."[8]**

3. எதனைக்கொண்டு நமது நாவை அழகுபடுத்திக் கொள்ள வேண்டும்? ________________________

________________________________________________________________________________

4. எதனைக்கொண்டு நமது ஆன்மாவை அலங்கரித்துக் கொள்ள வேண்டும்? __________________

________________________________________________________________________________

**"உங்களுடைய கண் கற்புடையதாகவும், கரம் விசுவாசமுள்ளதாகவும், உங்கள் நா மெய்ம்மைத் தன்மை உடையதாகவும், உங்கள் உள்ளம் தெளிவுப் பெற்றதாகவும் இருக்கட்டும்."[9]**

5. நமது கண்கள் எப்படியிருக்க வேண்டும்? ________________________________________ நமது கரங்கள்? ____________________ நமது நா? ____________________________________ நமது உள்ளம்? ________________________________

**"ஆண்டவனின் கூடாரத்தினுள் வசித்து நிலையான மகிமையெனும் ஆசனங்களின் மீது நிலைப்படுத்தப்பட்டவர்கள் தாங்கள் பசியினால் இறந்து கொண்டிருந்தாலும், தங்கள் கரங்களை நீட்டி, தங்கள் அண்டையிலுள்ளவர் எவ்வளவு இழிவானவராகவும் மதிப்பற்றவராகவும் இருந்தாலும், அவரது உடைமையை சட்டத்திற்குப் புறம்பாகக் கைப்பற்ற மறுப்பர்."[10]**

பசியினால் நாம் இறந்து கொண்டிருந்தாலும் எதைச் செய்யக்கூடாது? _______________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 4

பகுதி 2-இல், சில வினாக்கள் குறிப்பான பதிலை வேண்டுகின்றன என்பதை நீங்கள் கவனித்திருக்கக்கூடும். அவ்விதச் சூழ்நிலைகளில், தகுந்த பதில்கள் குறித்த சந்தேகங்கள் எழுமானால் நீங்களும் உங்கள் சக குழுமத்தினரும் சிந்தனா ஒற்றுமை பெற உங்கள் பயிற்றுனர் உங்களுக்கு உதவிடக்கூடும். மற்ற பயிற்சிகளைப் பொறுத்த வரையில், கேள்விகள் பற்றிய விவாதங்களே பயன் தருவனவாகும். ஒரு குறிப்பிட்ட பதில் ஏதும் எதிர்பார்க்கப்படவில்லை. பின்வருவதில் 3'ஆம் கேள்வி முதலாம் வகையைச் சார்ந்தும் 6'ஆம் கேள்வி இரண்டாம் வகையைச் சார்ந்துமுள்ளன.

1. மனித நற்பண்புகள் அனைத்திற்கும் அஸ்திவாரம் வாய்மையே. ஐந்து நற்பண்புகளைக் குறிப்பிடுக. ______________________________________________

______________________________________________

______________________________________________

2. வாய்மையின்றி இவ்வுயர் பண்புகளை நாம் அடைய இயலுமா? ______________

3. பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

   ____ ஒருவன் பொய் சொன்ன போதிலும், நீதியுடையவனாக இருப்பான்.
   ____ திருடுபவனின் கரங்கள் விசுவாசமானவை.
   ____ ஒரு நேர்மையான கரம் தனக்குச் சொந்தமில்லாத பொருளை ஒருபோதும் தொடாது.
   ____ ஆபாச நூல்களைப் படிப்பது கற்பு நெறியுடனான கண்ணைக் கொண்டிருக்க வேண்டுமென்ற பஹாவுல்லாவின் அறிவுரைக்கு மாறானது.
   ____ வாய்மையென்பது பொய் பேசாமல் இருப்பது.
   ____ நேர்மையென்பது ஆன்மாவின் ஓர் ஆபரணம்.
   ____ பொய்யுரைப்போன் ஆன்மீக முன்னேற்றம் அடைய இயலும்.
   ____ அவ்வப்போது பொய் சொல்லுதல் ஏற்கப்படக்கூடியதே.
   ____ பசியோடு இருக்கும்போது திருடுவது இறைவனின் முன்னிலையில் ஏற்றுக் கொள்ளத்தக்கதே.
   ____ ஒருவரின் அனுமதியில்லாமல் அவர் பொருளை எடுத்துக் கொண்டு பிறகு அதைத் திருப்பிக் கொடுப்போம் என எண்ணுவது திருட்டல்ல.
   ____ நாம் நேர்மையுடனும், உண்மையுடனும், நீதியுடனும் நடந்து கொண்டால் நமது உள்ளம் பிரகாசமாகும்.
   ____ சிறிது ஏமாற்று வேலை செய்யாமல் வியாபாரத்தில் வெற்றி காண முடியாது.

4. ஒருவன் தனக்குத்தானே பொய் சொல்லிக்கொள்ள இயலுமா? ______________

5. பொய் சொல்லும்போது நாம் எதனை இழக்கிறோம்? ______________

6. நாம் உண்மையுடனும், நேர்மையுடனும் இருந்தால் இவ்வுலகம் எப்படி இருக்கும்? ______

______________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 5

பின்வரும் புனிதவாசக வரிகளைப் படித்து அவற்றை மனனம் செய்ய முயலவும். திருவாக்குகளிலிருந்து மேற்கோள்களை மனனம் செய்வது மிகுந்த நன்மை பயப்பதாகும். அவ்வாறு செய்திட நீங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இருப்பினும், எல்லாருமே சுலபமாக மனனம் செய்திட முடியாது. ஆனால், மனனம் செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுதல் அந்த கருத்துகளை நமது இதயம், மனம் ஆகியவற்றில் பொறிப்பதற்கும், அவற்றை மூலவுரைகளில் உள்ளதற்கு நிகராக வெளிப்படுத்துவதற்கும் உதவிடும்.

**"அன்பு கனிந்த நா, மனித உள்ளங்களைக் கவர்ந்திடும் காந்தக்கல். அதுவே ஆவியின் உணவு; அது வார்த்தைகளுக்குப் பொருளென்னும் ஆடையை அணிவிக்கின்றது; விவேகம், புரியுந்திறன் என்னும் ஒளியின் தோற்றிடம் அதுவே."[11]**

1. அன்பு கனிந்த நாவானது எவ்வாறு வர்ணிக்கப்படலாம்? ______________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

2. அன்பு கனிந்த நா சொற்கள் மீது என்ன விளைவினை ஏற்படுத்துகிறது? __________________

________________________________________________________________________________

**"இறைவனின் அன்புக்குரியவர்களே! இத்தெய்வீகச் சகாப்தத்தில் முரண்பாடுகளும் சச்சரவுகளும் ஒரு போதும் அனுமதிக்கப்படவில்லை. ஒவ்வொரு வலுச்சண்டைக்காரரும் இறைவனின் அருளைப் பெறுவதிலிருந்து தம்மைத் தாமே தடுத்துக் கொள்கிறார்கள்."[12]**

3. இம்மேற்கோளின்படி, இந்தச் சகாப்தத்தில் எது அனுமதிக்கப்படவில்லை? ________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

4. வலுச்சண்டைக்காரர்கள் தமக்குத் தாமே என்ன செய்து கொள்கிறார்கள்? ________________

________________________________________________________________________________

**"இந்நாளில், இறைவனின் நேசர்களிடையே கருத்து வேறுபாடு, பூசல், சச்சரவு, பகைமை, அக்கறையின்மை ஆகியவைப்போன்று, இச்சமயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை வேறெதுவுமே இருக்க முடியாது."[13]**

5. இறைவனின் சமயத்திற்குக் கேடினை விளைவிக்கும் சூழ்நிலைகள் எவை? ____________________
________________________________________________________________________________________
________________________________________________________________________________________

**"வார்த்தைகளால் மட்டுமே நட்பினைக் காட்டுவதில் மனநிறைவு பெறாதீர். உங்கள் பாதையில் சந்திக்கும் அனைவருக்காகவும் உங்கள் உள்ளம் அன்புக் கருணை எனும் தீயினைக் கொண்டு எரியட்டும்."[14]**

6. எந்த வகையான நட்பு நமக்கு மனநிறைவு அளிக்கக்கூடாது? ____________________________________
________________________________________________________________________________________
________________________________________________________________________________________

7. நமது உள்ளங்களில் எது பிரகாசத்துடன் எரியவேண்டும்? ________________________________________
________________________________________________________________________________________

**"போர் எனும் எண்ணம் எழும்பொழுது அமைதி எனும் மேலும் வலுவான எண்ணத்தைக் கொண்டு அதனை எதிர்த்திடுவீராக. வெறுப்பு எனும் எண்ணம் அதனினும் சக்திவாய்ந்த அன்பு எனும் எண்ணத்தால் அழிக்கப்படல் வேண்டும்."[15]**

8. போர் எனும் எண்ணத்தை எதனால் எதிர்த்திட வேண்டும்? _______________________________________
________________________________________________________________________________________

9. வெறுப்பு உணர்ச்சியை எதனைக் கொண்டு அழிக்க வேண்டும்? __________________________________
________________________________________________________________________________________

## பகுதி 6

மேலே காணப்படும் மேற்கோள்களை மனதில் கொண்டு, கீழ்காணும் வினாக்களுக்குப் பதில் அளிக்கவும்:

1. அன்பு கனிந்த நா எவ்வகையில் காந்தக் கல்லைப் போல் செயல்படுகிறது? ____________________
________________________________________________________________________________________

2. கீழ்கண்ட சொற்றொடர்களில் எவை அன்பு கனிந்த நாவிலிருந்து தோன்றுகின்றன?

_____ "என்னைத் தொல்லைப்படுத்தாதே"
_____ "இதை ஏன் உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை?"
_____ "தயவு கூர்ந்து எனக்காகக் காத்திருக்க முடியுமா?"
_____ "என்னே மோசமான பிள்ளைகள்"
_____ "மிக்க நன்றி, நீங்கள் மிகவும் அன்பானவர்"
_____ "எனக்கு இப்போது நேரமில்லை; நான் மிகவும் வேலையாய் இருக்கிறேன்"

3. கீழ்கண்ட சூழ்நிலைகளில் எவற்றுள் முரண்பாடுகளும் பூசலும் காணப்படுகின்றன?

_____ பஹாய் கலந்தாலோசித்தலின் போது இருவர் வேறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்கின்றனர்.
_____ கலந்தாலோசித்தலின் போது இருவர் சினமுற்று ஒருவருக்கொருவர் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர்.
_____ இரண்டு பேர் ஒருவர் மற்றவரிடம் பேச்சுவார்த்தை இல்லாத காரணத்தினால் வாராந்திர வழிபாட்டுக் கூட்டத்திற்கு செல்வதில்லை..
_____ ஒரு பணித்திட்டத்தில் உடனுழைத்து வரும் அணியின் உறுப்பினர்கள், ஒவ்வொருவரும் மற்றவர்கள் தங்கள் பங்கைச் செய்வதில்லை என சதா குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

4. கீழ்கண்டவற்றுள் எவை பகைமையின் அறிகுறிகளைக் காண்பிக்கின்றன?

_____ இரு நண்பர்கள் வீதியில் ஒருவர் மற்றவரைத் தாண்டிச் செல்கின்றார் ஆனால், ஒருவரையொருவர் கண்டுகொள்ளவில்லை.
_____ வழிபாட்டுக் கூட்டத்திற்கு ஒருவர் வருகின்றார், எல்லாரும் அவரைக் கனிவுடன் வரவேற்கின்றனர்.
_____ ஒரு குழுமத்தின் இரு உறுப்பினர்கள் ஒருவர் மற்றவரிடம் மரியாதையாக நடந்துகொண்ட போதும் ஒரு பணித்திட்டத்தில் ஒன்றுசேர்ந்து பங்கேற்கத் தயங்குகின்றனர்.

5. கீழ்கண்ட சொற்றொடர்கள் சரியா என முடிவு செய்க.

_____ மற்றவர் மனம் புண்ணாகும் என்பதைக் கருதாமல் ஒருவர் தான் அவரைப் பற்றி என்ன நினைக்கிறாரோ அதை அப்படியே சொல்ல வேண்டும்.
_____ முரண்பாடுகளைப் தவிர்ப்பதற்குப் பொய் சொல்வது சரியே.
_____ முரண்பாடுகளை அன்பினாலும் பாசத்தினாலும் வெற்றி கொள்ளலாம்.
_____ அன்போடு கூறப்படும் சொற்கள் கூடுதல் விளைவுத்திறம் மிக்கவை.
_____ ஒருவர் சண்டைக்குக் காரணமாக இருந்தால் அவருடன் சண்டையிடுவதில் தவறில்லை.
_____ ஒருவர் நோயுற்றிருக்கும் போதும் கவலையாய் இருக்கும் போதும் பிறர் மனதைப் புன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தலாம்.
_____ பிறர் தவறு செய்யும்போது அவர்களைப் பார்த்துச் சிரித்தல் அன்பற்ற செயலாகும்.

______ நண்பர்களிடையே கசப்புணர்வு தோன்றுமாயின் ஒவ்வொருவரும் மற்றவருடன் நெருங்கிட சிறப்பு முயற்சி எடுத்தல் வேண்டும்.

______ நண்பர்களிடையே கசப்புணர்வு தோன்றுமாயின், ஒவ்வொருவரும் மற்றவர் நெருங்கி வர முயலும் வரை, காத்திருக்க வேண்டும்.

## பகுதி 7

கீழ்காணும் வாசகங்களைப் படித்து, அவற்றை மனனம் செய்யவும்:

**"...புறங்கூறுதல் உள்ளத்தின் ஒளியினைத் தணியச் செய்து ஆத்மாவின் உயிரினையும் அழித்துவிடும்."[16]**

**"நீயே ஒரு பாவியாக இருக்கும் வரையில் மற்றவர்களின் பாவங்களைப் பற்றி மூச்சுவிடாதே."[17]**

**"தீயதைப் பேசாதே, அதனால் மற்றவர்கள் அதை உன்னிடம் பேசுவதைக் கேட்கத் தேவையில்லை; மற்றவர்களின் குறைகளைப் பெரிது படுத்தாதே, அதனால் உன்னிடம் உள்ள குறைகள் பெரிதாகத் தோன்றாது..."[18]**

**"உருவின் புத்திரனே! உன்னிடத்திலுள்ள குறைகளை மறந்துவிட்டு எப்படி நீ மற்றவர்களின் குறைகளைக் காணுவதையே வேலையாகக் கொண்டிருக்கிறாய்?"[19]**

1. புறங்கூறும் ஒருவர் மீது புறங்கூறுதல் என்ன விளைவினை ஏற்படுத்துகிறது? ______________
_______________________________________________________________________

2. பிறருடைய பாவங்களைப் பற்றி மூச்சுவிடும் முன் நாம் எதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்?
_______________________________________________________________________
_______________________________________________________________________

3. நாம் பிறருடைய தவறுகளை மிகைப்படுத்தினால் நமக்கு என்ன நேரிடும்? ______________
_______________________________________________________________________

4. பிறருடைய தவறுகளைப் பற்றி நாம் எண்ணும் போது நாம் எதை நினைவில் கொள்ள வேண்டும்? ________________________________________________________
_______________________________________________________________________

## பகுதி 8

மேலே காணப்படும் மேற்கோள்களை மனதில் கொண்டு, கீழ்காணும் வினாக்களுக்குப் பதில் அளிக்கவும்:

1. பிறர் குறைகளைக் காணுவதையே வேலையாகக் கொள்ளும் ஒருவனின் ஆன்ம வளர்ச்சி என்னவாகின்றது? ______________________________

2. புறங்கூறுதல் ஒரு சமூகத்தில் என்ன விளைவை ஏற்படுத்துகிறது? ______________________________

3. நண்பர் ஒருவர் மற்றொருவருடைய தவறுகளைப் பற்றி பேசத் தொடங்கும் போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ______________________________

4. கீழ்கண்ட தகவல்கள் சரியா என்பதை முடிவு செய்யவும்:

____ நாம் ஒருவருடைய உண்மையான குறைகளைப் பற்றி பேசும் போது அது புறங்கூறுதல் ஆகாது.
____ நாம் ஒருவருடைய நற்குணங்களையும் குறைபாடுகளையும் பற்றி ஒரே நேரத்தில் பேசும் போது அது புறங்கூறுதல் ஆகாது.
____ புறங்கூறுதல் நமது சமூகத்தில் ஒரு பழக்கமாக ஆகிவிட்டது. அதைப் போக்குவதற்கான ஒழுக்கத்தை நாம் வளர்க்க வேண்டும்.
____ ஒருவரைப் பற்றி பேசியதை அந்த நபரிடம் சொல்ல மாட்டேன் என செவிமடுப்பவர் வாக்குறுதி அளித்தால், புறங்கூறுவதில் தீங்கு இல்லை.
____ புறங்கூறுதல் ஒற்றுமையின் மாபெரும் பகைமைகளில் ஒன்று.
____ பிறரைப் பற்றியே எப்போதும் பேசிக் கொண்டிருக்கும் பழக்கத்திற்கு நாம் ஆளானால், புறங்கூறுதல் என்னும் ஆபத்தில் சிக்கிடுவோம்.
____ ஒரு செயற்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதற்காக ஓர் உள்ளூர் ஆன்மீகச் சபையில் வெவ்வேறு மக்களின் திறமைகள் விவாதிக்கப்படும் போது அது புறம் பேசுதல் ஆகும்.
____ நாம் பிறரைப் பற்றிப் புறம்பேச உந்தப்படும் போது நாம் நம்முடைய குறைகளை நினைத்துப் பார்க்க வேண்டும்.
____ ஒருவர் சமயத்திற்குத் தீங்கு இழைக்கிறார் என்று அறியும்போது மற்ற பஹாய்களுடன் அதை விவாதிக்க வேண்டும்.
____ ஒருவர் சமயத்திற்குத் தீங்கு இழைக்கிறார் என்றறிந்தால் அதை உள்ளூர் ஆன்மீகச் சபையிடம் மட்டுமே தெரிவிக்க வேண்டும்.
____ கணவனும் மனைவியும் தங்களுக்கிடையில் ரகசியம் எதனையும் வைத்திருக்கக் கூடாது என்பதால் அவர்கள் மற்றவர்களின் குறைகளைப் பற்றி பேசுவது தவறல்ல.

## பகுதி 9

ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, அனுதினமும் திருவாக்குகளிலிருந்து பத்திகளைப் படிப்பதுடன் அவற்றின் அர்த்தம் குறித்து பிரதிபலிக்கும் பழக்கத்தை உருவாக்கி பலப்படுத்தும் பங்கேற்பாளர் முயற்சிகளில், அவர்களுக்கு உதவுவதே இந்த பாடப்பிரிவின் நோக்கமாகும். ஒவ்வொரு காலையும் மாலையும் கடவுளின் வாசகங்களைப் படித்தல் நமது ஆன்மீக அபிவிருத்திக்கு ஏதுவான பஹாவுல்லாவின் ஒரு போதனையாகும். பின்வரும் பத்தி இந்தக்

கடமையை நிறைவேற்றுவதினால் நாம் அடையும் அருட்கொடைகளை நமக்கு நினைவூட்டுகின்றது, அதை மனனம் செய்யுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகின்றீர்.

> **"எனது வார்த்தைகள் என்னும் சமுத்திரத்தினுள் உங்களை மூழ்கச் செய்வீராக. அதனால் நீங்கள், அதன் மர்மங்களை வெளிப்படுத்தி அதன் ஆழத்தில் மறைந்து கிடக்கும் எல்லா ஞானமுத்துகளையும் கண்டுபிடிக்கக் கூடும்."20**

இந்த பாடப்பிரிவை பூர்த்திசெய்துவிட்டதால், இப்பொழுது பஹாவுல்லாவின் திருவாக்கு நூல் ஒன்றைப் பெற்று அதை அனுதினமும் நீங்கள் படித்திட விரும்பலாம். இதற்கு மறைமொழிகள் எனும் நூல் ஒரு நல்ல ஆரம்பத் தேர்வாக இருக்கும்.

## குறிப்புகள்

1. பஹாவுல்லா, ஷோகி எஃபெண்டியினால் குறிப்பிடப்பட்டது, *தெய்வீக நீதியின் வருகை* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2006, 2018 பதிப்பு), பத்தி 39, பக் 36-37.2.
2. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, (வில்மட்: பஹாய் பிரசுர பதிப்பகம், 1983, 2017 பதிப்பு) CXXXIX, par. 8, பக். 345.
3. பஹாவுல்லாவின் *மறை மொழிகள்* (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2003, 2012 பதிப்பு), அரபு எண். 31 பக். 11.
4. .மேற்கண்டவாறு., பாரசீகம் எண். 5, பக். 24.
5. மேற்கண்டவாறு , பாரசீகம் எண். 69, பக். 46.
6. அப்துல்-பஹா, ஷோகி எஃபெண்டி குறிப்பிட்டவாறு, *தெய்வீக நீதியின் வருகை*, பத்தி. 40 பக். 39
7. மேற்கண்டவாறு
8. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, பக். , CXXXVI, பத்தி. 6, பக். 336.
9. கித்தாப்-இ-அக்டாஸிற்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட *பஹாவுல்லாவின் நிருபங்கள் (விவேகம் எனும் ஊற்று*) (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 1988, 2005 பதிப்பு) எண். 9.5, பக். 138
10. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, பக். CXXXVII, பத்தி. 3, பக். 338.
11. மேற்கண்டவாறு CXXXII, பத்தி. 5, பக். 327.
12. அப்துல்-பஹாவின் *உயிலும் சாசனமும்* (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 1944, 2013 பதிப்பு), பக். 26
13. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, பக். V, பத்தி. 5, பக். 8.
14. அக்டோபர் 1911, 16 & 17'ஆம் தேதிகளில் ஆற்றிய உரை, *பாரீச் பேருரைகள்*, 1911'இல் அப்துல்-பஹா ஆற்றிய உரைகள் (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம் 2006, 2016 பதிப்பு), எண். 1.7, பக் 6.
15. அக்டோபர் 1911, 21'ஆம் தேதியில் அப்துல்-பஹா ஆற்றிய உரை, மேற்கண்டவாறு எண். 6.7, பக். 22
16. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, பக். , CXXV, பத்தி. 3, பக். 300.
17. பஹாவுல்லாவின் *மறை மொழிகள்* அரபு எண். 27, பக். 10.
18. மேற்கண்டவாறு அரபு எண். 44, பக். 37.
19. மேற்கண்டவாறு, அரபு எண். 26, பக். 10.
20. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, பக்., LXX,பத்தி. 2, பக். 154.



# பிரார்த்தனை

**நோக்கம்**

பிரார்த்தனையின் முக்கியத்துவத்தின் மீது பிரதிபலித்தல்
மற்றும் வாடிக்கையாகப் பிரார்த்திக்கும் பழக்கத்தை வலுப்படுத்தல்

## பகுதி 1

ரூஹி பயிற்சிக்கழகத்தின் பயிற்சிகள் அதன் பங்கேற்பாளர்கள் ஒரு சேவை பாதையில் நடப்பதற்கு உதவிடும் நோக்கம் கொண்டுள்ளன. இந்தப் பாதையில் இரட்டை நோக்க உணர்வினால் உந்தப்பட்டு ஆன்மீக மற்றும் அறிவாற்றல் ரீதியில் வளர்ச்சி காண்பதற்கும் சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிப்பதற்கும் நாம் பயணிக்கின்றோம். நமது நோக்கத்தின் இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட முடியாது. ஓர் உரைப்பகுதியில் பஹாவுல்லா நம்மைப் பின்வருமாறு ஊக்குவிக்கின்றார்:

> **“உங்களின் சொந்த காரியங்களிலேயே கருத்தாய் இராதீர்; எவை, மனித இனத்தின் நற்பேறினைச் சீர்ப்படுத்தி, மனிதரின் உள்ளங்களையும் ஆன்மாக்களையும் புனிதப்படுத்துகின்றனவோ அவற்றின் மீதே உங்கள் சிந்தனையை நிலைக்க விடுங்கள்.”[1]**

மற்றோர் உரைபகுதியில் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

> **...மரணத்துக்குரிய மனிதர், முற்றிலும் வெற்று நிலையிலிருந்து, உள்ளமை எனும் நிலைக்குள் அடியெடுத்து வைத்துள்ளதன் நோக்கம், அவர்கள் உலகின் சீர்த்திருத்தத்திற்கு உழைத்து, அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் ஒன்றாக வாழக்கூடும் என்பதே ஆகும்.”[2]**

நமது உள்ளார்ந்த நிலையின் தொடர்பில், அவர் பின்வருமாறு கூறுகின்றார்:

> **“ஒரு பரிசுத்தமான உள்ளம் ஒரு கண்ணாடியைப் போன்றது; அன்பு, கடவுளைத் தவிர அனைத்திலிருந்தும் பற்றறுத்தல் ஆகிய மெருகூட்டிகளைக் கொண்டு அதைச் சுத்தப்படுத்துவீராக; அதனால், அதில் உண்மை சூரியன் பிரகாசித்து, நித்திய காலைப் பொழுது விடிந்திடுமாக.”[3]**

மேலும் அப்துல்-பஹா நமக்குக் கூறுகின்றார்:

> **“நீங்கள் தெய்வீக அருட்கொடைகளின் பெறுநராகிட உங்கள் உள்ளங்கள் பரிசுத்தமாகவும் உங்கள் உள்நோக்கங்கள் நேர்மையாகவும் இருந்திட வேண்டும்.”[4]**

1. நமது சிந்தனைகள் மற்றும் காரியங்களின் கவனம் எதுவாக இருக்க வேண்டும்?

   ____________________________________________

   ____________________________________________

2. ஒன்றுமில்லா நிலையிலிருந்து உள்ளமை எனும் இராஜ்யத்திற்குள் நாம் அடியெடுத்து வைத்துள்ளதன் நோக்கமென்ன? ____________________________

   ____________________________________________

   ____________________________________________

3. எதனைக் கொண்டு நமது உள்ளமெனும் கண்ணாடியை நாம் சுத்தம் செய்ய வேண்டும்? ____
_______________________________________________________________________________
_______________________________________________________________________________

4. தெய்வீக அருட்கொடைகளை ஈர்க்கும் சில சூழ்நிலைகள் யாவை? ______________________
_______________________________________________________________________________

5. பின்வருவனவற்றுள் எவை உண்மை?

_____ நீங்கள் முதலில் உங்கள் மீது அக்கறை செலுத்த வேண்டும், அதன் பின்னரே பிறர் மீது அக்கறை செலுத்தலாம்.
_____ நீங்கள் எப்போதும் பிறருக்கே உதவி வந்தால், இறுதியில் உங்கள் சொந்த குறிக்கோள்களைப் பற்றி மறந்திடுவீர்.
_____ நீங்களே உங்களின் மிக நெருங்கிய நண்பர்.
_____ முதலில் உங்களை எது மகிழ்விக்கின்றது என்பதைக் கண்டுகொள்வதே மிக முக்கியம்.
_____ உங்கள் கனவுகளைப் பின்தொடருங்கள், அவை உங்கள் மகிழ்ச்சிக்கு வழிவகுத்திடும்.
_____ நீங்கள் பிறரைப் புண்படுத்தாமல் இருக்கும்வரை, நீங்கள் என்ன செய்கிறீர் என்பது ஒரு பொருட்டல்ல.
_____ நீங்கள் ஏதாவது நன்மைகள் செய்யும்வரை உங்கள் நோக்கங்கள் சுயநலமிக்கவையாக இருப்பதில் தவறில்லை.

## பகுதி 2

நாம் அனைவரும் மேன்மைமிக்கவர்களாகப் படைக்கப் பட்டுள்ளோம் என்பதே நமது இரட்டை நோக்கத்திற்கு நடுமையமாக இருக்கும் ஒரு மறுக்கமுடியாத உண்மையாகும்.

பஹாவுல்லா கூறுகின்றார்:

**“ஆவியின் புத்திரனே! உன்னைச் செல்வந்தனாகப் படைத்தேன்; நீ ஏன் உன்னை ஏழ்மை நிலைக்குத் தாழ்த்திக் கொள்கின்றாய்? உன்னை உயர் பண்பினனாய்ப் படைத்தேன்; நீ ஏன் உன்னை இழிவுபடுத்திக் கொள்கின்றாய்? அறிவின் சாரத்திலிருந்து உனக்கு உயிர்த்தன்மை அளித்தேன், எதனால் நீ என்னைத் தவிர வேறொருவரிடம் இருந்து மெய்யறிவு தேடுகின்றாய்? அன்பு என்னும் களிமண்ணிலிருந்து நான் உன்னை ஆக்கினேன், எங்ஙனம் நீ வேறொருவருடன் ஈடுபாடு காட்டுகின்றாய்? உனது பார்வையை உன்னுள் செலுத்துவாயாக; அதனால், வலிமையுடையவனாய், சக்திமிக்கவனாய், சுயஜீவியாய் யான் உன்னுள் நின்று கொண்டிருப்பதைக் கண்டிடக் கூடும்.”[5]**

கீழ்காணும் காலியிடங்களை நிரப்புதல் இப்பகுதியின்மீதான உங்கள் பிரதிபலிப்பிற்கு உதவிடும்.

"ஆவியின் புத்திரனே! உன்னைச் ________________ படைத்தேன்; நீ ஏன் உன்னை ______________ நிலைக்குத் _______________ கொள்கின்றாய்? உன்னை ____________ ________________ படைத்தேன்; நீ ஏன் உன்னை _________________ கொள்கின்றாய்? ____________________________________ உனக்கு _________________ அளித்தேன், எதனால் நீ என்னைத் தவிர வேறொருவரிடம் இருந்து ______________________________? ____________ என்னும் களிமண்ணிலிருந்து நான் உன்னை ________________, எங்ஙனம் நீ __________________ ______________ காட்டுகின்றாய்? உனது ___________ உன்னுள் ___________________; அதனால், _____________________________, __________________________, ______________________ யான் உன்னுள் நின்று கொண்டிருப்பதைக் கண்டிடக் கூடும்."

நமது ஆன்மாக்களின் மேன்மைக்கு உண்மையாக இருந்திட வேண்டுமானால், நாம் நம்மைப் படைத்தவரின்பால் திரும்பி, அவரிடமிருந்து அறிவொளி பெற வேண்டும். பிரார்த்தனையே இதனை அடைவதற்கு உண்மையான வழிகளுள் ஒன்றாகும்."[6] "ஆன்மீக நற்பண்புகளையும் சக்திகளையும் பெறுவதன் மூலம், தனிநபரையும் சமுதாயத்தையும் மேம்படுத்துவதே சமயத்தின் தலையாய இலக்காகும். மனித ஆன்மாவே முதலில் ஊட்டமளிக்கப்பட வேண்டும். இந்த ஆன்மீக ஊட்டத்தைப் பிரார்த்தனையே மிகச் சிறப்பாக வழங்கிட முடியும்," என்று சமயத்தின் பாதுகாவலரான ஷோகி எஃபெண்டி நம்மிடம் கூறுகின்றார்.

## பகுதி 3

கடவுள் எல்லாம் அறிந்தவர், சர்வ ஞானி. அவர் நம்மைப் படைத்துள்ளார், நம் உள்ளங்களில் உள்ளதை அறிவார், நமக்கு எது மிகவும் அவசியம் என்பதையும் அவரறிவார். அவருக்கு நமது பிரார்த்தனைகள் தேவையில்லை. பிறகு நாம் ஏன் பிரார்த்தனை செய்ய வேண்டும்?

அப்துல்-பஹா கூறுகின்றார்:

**"மிக உயர்ந்த பிரார்த்தனையில் மனிதர்கள் இறைவனின் அன்பிற்காக மட்டுமே பிரார்த்தனைச் செய்கிறார்கள். இறைவனின் மீது அல்லது நரகத்தின்மீதுள்ள அச்சத்தாலோ, அருட்கொடை அல்லது சுவர்க்கத்தை அடையும் நம்பிக்கையாலோ அல்ல. ஒரு மனிதன் மற்றொரு மனிதனுடன் அன்புகொள்ளும் போது அவரால் தமது அன்பிற்கினியவரின் பெயரைக் குறிப்பிடாமல் இருக்க இயலாது. இறைவனுடன் அன்பு கொண்ட ஒருவருக்கு அவரது திருநாமத்தை உச்சரிக்காமலிருப்பது இன்னும் எவ்வளவு சிரமமான ஒன்று.... ஆன்மீக மனிதன் இறைவனை நினைவுப்படுத்திக்கொள்வதைத் தவிர வேறெதிலும் இன்பத்தைக் காண்பதில்லை."[7]**

அப்துல்-பஹா ஒரு கேள்விக்குப் பின்வருமாறு விளக்கமளிக்கின்றார்:

**ஒரு நண்பர் இன்னொருவரிடம் அன்பு கொள்வாரானால் அதை அவ்வாறு கூற விரும்புவது இயற்கையல்லவா? அந்நபர் அவர் மீது, தான் வைத்திருக்கும் அன்பை அறிந்துள்ளார் என்பது தெரிந்தாலும் அதனை அவரிடம் கூற விரும்புவார் அல்லவா?.... இறைவன் எல்லோருடைய இதயங்களின் ஆவல்களையும் அறிந்திருக்கிறார் என்பது உண்மையே. ஆனால், பிரார்த்திப்பதற்கான தூண்டுதலானது இறைவன்பாலுள்ள மனிதனது அன்பிலிருந்து தோன்றும் இயற்கையான ஒன்றாகும்."[8]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

   அ. மிக ________________ பிரார்த்தனையில் நாம் இறைவனின் அன்பிற்காக மட்டுமே ________________ செய்கின்றோம். இறைவனின் மீது அல்லது ___________________ அச்சத்தாலோ, ____________________ அல்லது ________________ அடையும் நம்பிக்கையாலோ அல்ல.

   ஆ. நாம் மற்றொரு மனிதனுடன் ______________ கொள்ளும் போது நம்மால் நமது ____________________________ பெயரைக் குறிப்பிடாமல் ____________ ___________. இறைவனுடன் நாம் _________________________ நமக்கு ____________ திருநாமத்தை ____________________________________________ இருப்பது இன்னும் எவ்வளவு __________________ ஒன்று.

   இ. ஆன்மீக மனிதன் இறைவனை ____________________________ தவிர வேறெதிலும் ____________________ காண்பதில்லை.

2. நாம் ஏன் பிரார்த்திக்கின்றோம்? ____________________________________________________________
   ______________________________________________________________________________________________

3. “இறைவனை நினைவுபடுத்திக்கொள்வது” எனும் சொற்றொடரின் அர்த்தமென்ன? _________
   ______________________________________________________________________________________________

4. மற்றொருவரை விரும்பும் ஒருவரின் மிகவும் தீவிர ஆவல் எதுவாக இருக்கும்? _______________
   ______________________________________________________________________________________________

5. பிரார்த்திப்பதற்கான தூண்டுதல் எதிலிருந்து தோன்றுகின்றது? ____________________________
   ______________________________________________________________________________________________

## பகுதி 4

பஹாவுல்லாவினால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு பிரார்த்தனையில் பின்வருமாறு படிப்போம்:

**“உமது அழகிலிருந்து என்னை மறைத்திடும் திரைகளை எரித்திடும் நெருப்பாகவும், உமது முன்னிலையெனும் சமுத்திரத்திற்கு வழிகாட்டிடும் ஒளிவிளக்காகவும் எனது பிரார்த்தனையை ஆக்கிடுவீராக.”[9]**

அதே பிரார்த்தனையில் கடவுளிடம் பின்வருமாறு வேண்டுகின்றோம்:

**"என் பிரபுவே, என் பிரார்த்தனையை ஒரு ஜீவ நீர் ஊற்றாக்குவீராக! அதனால் உந்தன் அரசுரிமை நிலைபெறும் வரை நான் வாழ்ந்து உமது உலகங்கள் ஒவ்வொன்றிலும் உம்மைப் பற்றி மொழிந்திடுவேன்."[10]**

1. எந்த அர்த்தத்தில் பிரார்த்தனை நெருப்பைப் போன்றிருக்கின்றது? அது எதை எரிக்கின்றது?
_______________________________________________
_______________________________________________

2. கடவுளிடமிருந்து நம்மைப் பிரித்திடும் சில திரைகளைக் குறிப்பிடவும்: ____________
_______________________________________________
_______________________________________________

3. பிரார்த்தனை ஒளியைப் போன்றிருக்க முடியுமா? அது நமக்கு எதனை நோக்கி வழிகாட்டுகின்றது? ____________________________________
_______________________________________________
_______________________________________________

4. பிரார்த்தனை ஜீவ நீர் ஊற்றைப் போன்றிருக்க முடியுமா? அது நமது ஆன்மாக்களின் மீது எதைப் பொழிகின்றது? ____________________________________
_______________________________________________

## பகுதி 5

அப்துல்-பஹாவின் பின்வரும் சொற்களைப் படித்துத் தியானிக்கவும்:

**"உயிர்வாழ் இவ்வுலகில் பிரார்த்தனையை விட மேலும் இனிமையான ஒன்று வேறெதுவும் இல்லை. மனிதன் பிரார்த்தனை நிலையில் வாழ வேண்டும். பிரார்த்தனை மற்றும் இறைஞ்சுகின்ற நிலைதான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகும். பிரார்த்தனை என்பது இறைவனுடன் உரையாடல் செய்வதாகும். அடையக்கூடிய மிக**

**உயர்ந்த நிலை அல்லது மிக இனிமையான நிலை, இறைவனுடன் உரையாடுவதைத் தவிர வேறெதுவுமில்லை. அஃது ஆன்மீகத்தைத் தோற்றுவிக்கின்றது., விழிப்புணர்ச்சியையும் தெய்வீக உணர்வுகளையும் தோற்றுவிக்கின்றது; மேலுலக இராஜ்யத்தின் புதிய ஈர்ப்புகளை ஈன்று, உயர்ந்த மதி நுட்பத்தின் உனர்வுகளைப் பிறப்பிக்கின்றது."**[11]

1. உயிர்வாழ் இவ்வுலகில் மிகவும் இனிமையான நிலை எது? ______________________________________
   ______________________________________________________________________________

2. "பிரார்த்தனை நிலை" எனும் சொற்றொடரின் பொருள் என்ன? ________________________________
   ______________________________________________________________________________
   ______________________________________________________________________________

3. பிரார்த்தனை உருவாக்குகின்ற சில மனப்பான்மைகளைக் குறிப்பிடவும்: _____________________
   ______________________________________________________________________________
   ______________________________________________________________________________

4. நீங்கள் இதுவரை ஆய்வு செய்துள்ள மேற்கொள்களை மீளாய்வு செய்து, பிரார்த்தனையின் இயல்பு குறித்த ஐந்து சொற்றொடர்களை எழுதவும்.

   - பிரார்த்தனை ______________________________________________________________
   - பிரார்த்தனை ______________________________________________________________
   - பிரார்த்தனை ______________________________________________________________
   - பிரார்த்தனை ______________________________________________________________
   - பிரார்த்தனை ______________________________________________________________

## பகுதி 6

பஹாவுல்லாவின் பின்வரும் சொற்களைப் படித்து அவற்றைத் தியானிக்கவும்:

**"எனது ஊழியனே, உன்னால் பெறப்பட்ட கடவுளின் வாசகங்களை அவர் அருகாமையில் ஈர்க்கப்பட்டவர்கள் ஓதியது போல் ஓதுவாயாக. அதனால் உன் கீதத்தின் இனிமை உன் சொந்த ஆன்மாவைக் கிளர்ச்சியுறச் செய்வதுடன் எல்லா மனிதர்களின் இதயங்களையும் ஈர்த்திடும். எவரொருவர், தனது அறையின் தனிமையில், இறைவனால் வெளிப்படுத்தப்பட்டுள்ள வாசகங்களை ஒப்புவிக்கின்றாரோ, அவரது வாய்மொழிந்த சொற்களின் நறுமணத்தினை எல்லாம் வல்லவரின் தூதகணங்கள் எல்லாத்திசைகளிலும் பரவச்செய்து ஒவ்வொரு நேர்மைமிக்க மனிதனின் உள்ளத்தினையும் துடிப்புறச் செய்யும். ஆரம்பத்தில் இதன் விளைவினை அவர்**

**அறியாதிருப்பினும், அவருக்கு அருளப்பட்ட கிருபையானது மெதுவாகவோ விரைவாகவோ தன் செல்வாக்கினை அவரது ஆன்மாவில் ஏற்படுத்தவே செய்யும். இவ்வாறாகவே கடவுளுடைய வெளிப்பாட்டின் புதிர்கள் சக்திக்கும், விவேகத்திற்கும் மூலமானவரின் திருவிருப்பத்தால் விதிக்கப்பட்டுள்ளது."[12]**

1. "ஓதுதல்" எனும் சொல்லின் அர்த்தமென்ன? ____________________

2. கடவுளின் வாசகங்களை நாம் எவ்வாறு ஓத வேண்டும்? ____________________

3. "ஒப்புவித்தல்" எனும் சொல்லின் பொருள் என்ன? ____________________

4. "பரப்புதல்" எனும் சொல்லின் பொருள் என்ன? ____________________

5. நம் கீதத்தின் இனிமை நம் ஆன்மாவின் மீது என்ன விளைவை ஏற்படுத்தும்? ____________________

6. நம் கீதத்தின் இனிமை பிறர் உள்ளங்களில் என்ன விளைவை ஏற்படுத்தும்? ____________________

## பகுதி 7

பஹாவுல்லாவினால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு பிரார்த்தனையில் இருந்து பின்வரும் இரண்டு பகுதிகளை நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்:

**"கடவுளே, என் கடவுளே! எனதாவல்களையும், என் செய்கைகளையும் கண்ணுறாதீர்! மாறாக மண்ணுலகையும் விண்ணுலகங்களையும் உள்ளடக்கியுள்ள உமது விருப்பத்தினையே கண்ணுறுவீராக. உமது உன்னத நாமத்தின் சாட்சியாக, தேசங்கள் யாவற்றுக்கும் பிரபுவானவரே! நீர் விரும்பியதையன்றி வேறெதனையும் நான் விரும்பியதில்லை. நீர் நேசித்ததையன்றி வேறெதனையும் நான் நேசித்ததில்லை."[13]**

**"உமது அருகில் உள்ளோர்களின் புகழுரை உமது அருகாமை என்னும் சுவர்க்கத்தை நோக்கிச் செல்லவோ, உம்மிடம் பக்தி கொண்டோர்களின் இதயங்கள் எனும்**

**பறவைகள் உமது வாயிற் கதவினை அடையவோ இயலாத அளவிற்கு நீர் அதி உயர்ந்திருக்கிறீர். பண்புகள் அனைத்திற்கும் மேலாகப் பரிசுத்தமானவராயும், நாமங்கள் அனைத்திற்கும் மேலாகப் புனிதமிக்கவராயும் இருந்திருக்கின்றீர் என்பதற்கு நானே சாட்சி. அதி மேலான சகல மகிமைபொருந்தியவருமான கடவுள் உம்மையன்றி வேறிலர்.”[14]**

## பகுதி 8

அப்துல்-பஹா கூறுகின்றார்:

**“கடவுளிடம் பிரார்த்தித்து உதவி கோருவதும் அவரிடம் இறைஞ்சி, மன்றாடி ஆதரவு கோருவதும் சேவகனுக்குப் பொருத்தமாகும். இதுவே சேவகத்தின் தரத்திற்கு பொருந்தியதாகும்; பிரபுவானவர் தமது முழுநிறைவான விவேகத்திற்கு ஏற்ப தாம் விரும்பிய எதனையும் கட்டளையிடுவார்.”[15]**

அவர் மேலும் விளக்குகின்றார்:

**"ஆவி செல்வாக்கினைக் கொண்டுள்ளது; பிரார்த்தனை ஆன்மீக விளைவை ஏற்படுத்தக்கூடியது; எனவே நாம் பிரார்த்தனை செய்கிறோம். "இறைவா இந்நோயுற்றோனைக் குணப்படுத்துவீராக!" அனேகமாக இறைவன் பதில் அளிப்பார். யார் பிரார்த்தனைச் செய்கிறார் என்பது முக்கியமானதா? இறைவன் ஊழியர் ஒவ்வொருவரின் பிரார்த்தனைக்கும் அது உடனடி தேவையாயிருப்பின் பதிலளிப்பார். அவரது கருணை விசாலமானது; எல்லையற்றது. அவர் எல்லா ஊழியர்களின் பிரார்த்தனைகளுக்கும் பதிலளிக்கிறார். செடி உள்ளுறையாகப் பிரார்த்தனை செய்கிறது, "இறைவனே எனக்கு மழை பொழிவீராக," என்று. இறைவன் அப்பிரார்த்தனைக்குப் பதில் அளிக்கிறார்; அச்செடியும் வளர்கிறது. இறைவன் எவரொருவருக்கும் பதிலளிப்பார்."[16]**

நமது பிரார்த்தனைகளில் நமது தேவைகளை நிறைவேற்றும்படி கடவுளை வேண்டுவது இயல்பானதே. ஆதலால், நாம் நமது ஆரோக்கியத்திற்காகவும், நமது அன்பிற்கினியோரின் ஆரோக்கியத்திற்காகவும் பிரார்த்திக்கின்றோம்; நமது குடும்பங்களின் ஆன்மீக, லௌகீக மேம்பாட்டிற்காகப் பிரார்த்திக்கின்றோம், வழிகாட்டலுக்காக நாம் பிரார்த்திக்கின்றோம். நாம் வலிமையை, விசுவாசத்தை, சேவை பாதையில் உறுதிப்படுத்தலை வேண்டுகின்றோம். கடவுளிடம் பிரார்த்திப்பதில், நமது விருப்பத்தை அவரது திருவிருப்பத்துடன் இணைவாக்குவதே வாழ்வில் நமது நோக்கமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆதலால், அவரது திருவிருப்பம் நிறைவேற்றப்பட பிரார்த்திக்க வேண்டும்; அதற்குக் கீழ்ப்படிய நாம் தயாராகவும் இருக்கவேண்டும் அப்துல்-பஹாவின் பின்வரும் சொற்களை மனனம் செய்தீர்களானால், அவை எல்லா நேரங்களிலும் உங்களுக்குக் களிப்பு மற்றும் உறுதிப் பெறுவதற்கான மூலாதாரமாக இருந்திடும்.

**“ஆண்டவன்பால் வதனத்தைத் திருப்பியுள்ளோரே! மற்றெல்லாப் பொருள்களிடமிருந்தும், கண்களை மூடி சர்வ ஒளிமயமானவரின் அரசினை**

**நோக்குவீராக. உங்களுக்கு வேண்டியதனைத்தையும் அவர் ஒருவரிடம் மட்டுமே கோருங்கள். தேடுவதனைத்தையும் அவர் ஒருவரிடத்திலேயே தேடுங்கள். ஒரே பார்வையில் ஒரு நூறாயிரம் நம்பிக்கைகளை அளிப்பார். ஒரே நோக்கில் ஒரு நூறாயிரம் தீராத நோய்களைக் குணப்படுத்துவார். ஒரே ஒரு கண்ணோட்டத்தினைக் கொண்டு ஒவ்வொரு காயத்திற்கும் மருந்திடுவார். தலையின் ஓரசைவின் மூலமாக உள்ளங்களைத் துன்பமெனும் கட்டுகளிலிருந்து விடுவிப்பார். அவர் செய்கின்றவாறே அவர் செய்வார். வேறு வழி ஏதும் நமக்குண்டோ? அவர் விரும்பியதை அவர் விதிப்பார். ஆகவே, அவர் முன் பணிவன்புடன் சிரந்தாழ்த்தி கருணையே ஆன ஆண்டவனிடத்தில் முழு நம்பிக்கை வைப்பதே மிகவும் நன்று.”[17]**

## பகுதி 9

நாம் இதுவரை படித்துள்ள அனைத்திலிருந்தும், பிரார்த்தனையின் மூலம் இறைவன்பால் திரும்புவது ஓர் ஆன்மீக வாழ்விற்கான முக்கிய தேவை என்பது தெளிவு. காலையில் எழுந்தவுடனும், இரவில் தூங்கச் செல்லும் முன்பும் கடவுளைப் பிரார்த்திப்பதுதான் எத்துணை இனிமையானது. பிரார்த்திப்பதற்காக நாம் எடுத்துக்கொள்ளும் நேரமும், எத்தனை பிரார்த்தனைகள் கூற விரும்புகின்றோம் என்பதும் நமது தேவைகளையும் ஆன்மீகத் தாகத்தையும் பொறுத்த ஒன்றாகும். எல்லா வேளைகளிலும், பஹாவுல்லா, பாப் பெருமானார், அப்துல்-பஹா ஆகியோரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள பல பிரார்த்தனைகளிலிருந்து நாம் தேர்வு செய்திட முடியும். பஹாவுல்லாவும், மூன்று கட்டாயப் பிரார்த்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார். ஷோகி எஃபெண்டி கூறுகின்றார்:

**“தினசரி கட்டாயப் பிரார்த்தனைகள் எண்ணிக்கையில் மூன்றாகும். சுருக்கமான கட்டாயப் பிரார்த்தனை ஒரே செய்யுளாக அமைந்துள்ளது. அதை இருபத்து நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை நண்பகலில் கூறவேண்டும். நடுத்தரக் கட்டாயப் பிரார்த்தனையை ஒரு நாளைக்கு மூன்று முறை காலை, நண்பகல், மாலை ஆகிய நேரங்களில் கூறவேண்டும். இப்பிரார்த்தனை சில உடலசைவுகள், சைகைகள் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டுள்ளது. இம்மூன்றில் நீண்ட கட்டாயப் பிரார்த்தனை மிக விரிவானது. அதை இருபத்து நான்கு மணி நேரத்திற்கு ஒருமுறை ஒருவர் தாம் விரும்பும் நேரத்தில் கூறவேண்டும்.”**

**“நம்பிக்கையாளர் ஒருவர் இம்மூன்று பிரார்த்தனைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கத் தாராளமாக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவற்றில் ஒன்றை அவை மூன்றிலும் உள்ளடங்கியுள்ள குறிப்பான கட்டளைகளுக்கேற்ப கூறுவது கட்டாயமாகும்.”[18]**

அவர் தொடர்ந்து கூறுகின்றார்:

**“குணப்படுத்தும் பிரார்த்தனை, அஹமதுவின் நிருபம், போன்ற குறிப்பிட்ட சில பிரார்த்தனைகளுடன் இந்தக் கட்டாயமான தினசரி பிரார்த்தனைகளுக்கும், பஹாவுல்லா விசேஷ ஆற்றலையும் தனிசிறப்பையும் வழங்கியுள்ளார். எனவே அவை அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டுக் கேள்விக்கிடமில்லாத நம்பிக்கையுடனும் மனவுறுதியுடனும் நம்பிக்கையாளர்களால் ஒப்புவிக்கப்படவேண்டும். அதனால்**

**அவற்றின் மூலமாக அவர்கள், இறைவனுடன் இன்னும் நெருங்கிய தொடர்பை மேற்கொண்டு அவருடைய சட்டங்கள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுடன் மேலும் பூரணமாகத் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.”[19]**

பஹாவுல்லாவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள மூன்று கட்டாய பிரார்த்தனைகளும் தனியாகக் கூறப்பட வேண்டும். குறிப்பிட்ட சடங்குடன் கூட்டங்களில் கூறப்படும் கட்டாயப் பிரார்த்தனையான கூட்டுப்பிரார்த்தனை{Congregational prayer) என்பது பஹாய் சமயத்தில் இல்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். நமக்குக் கூட்டுப் பிரார்த்தனையாக இறந்தோருக்கான பிரார்த்தனை ஒன்று மட்டுமே பஹாவுல்லாவினால் அளிக்கப்பட்டுள்ளது. அடக்கம் செய்யப்படுவதற்கு முன்பாக, எல்லோரும் அமைதியாக நிற்க, கூடியிருப்போரில் ஒருவரால் அப்பிரார்த்தனை கூறப்பட வேண்டும்.

1. “கட்டாயம்” எனும் சொல்லின் பொருள் என்ன? ______________________________

   ______________________________

2. பஹாவுல்லா எத்தனை கட்டாயப் பிரார்த்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார்? __________

   ______________________________

3. அம்மூன்று பிரார்த்தனைகளையும் நாம் அனுதினமும் கூறலாமா? ______________________

4. நாம் நீண்ட கட்டாயப் பிரார்த்தனையைக் கூற விரும்பினால், அதை ஒவ்வொரு நாளும் எத்தனை முறை கூற வேண்டும்? ______________________________

5. நடுத்தர கட்டாயப் பிரார்த்தனையைக் கூற விரும்பினால் அதை ஒரு நாளில் எத்தனை முறை கூற வேண்டும்? ______________________________

6. சுருக்கமான கட்டாய பிரார்த்தனையைக் கூற விரும்பினால் அஃது ஒரு நாளில் எத்தனை முறை கூறப்பட வேண்டும்? ______________________________

7. விசேஷ சக்தியுடைய சில பிரார்த்தனைகளைக் குறிப்பிடவும்: ______________________

   ______________________________

   ______________________________

8 இதற்கு முன் அவ்வாறு செய்யவில்லையெனில் சுருக்கமான கட்டாயத் துதியை இப்பொழுது மனனம் செய்யவும்:

   **“என் கடவுளே, உம்மை அறிந்து வழிபடுவதற்கெனவே என்னைப் படைத்திருக்கின்றீர் என்பதற்கு நான் சாட்சியமளிக்கின்றேன். இத்தருணம் என் பலவீனத்திற்கும் உமது வலிமைக்கும், என் வறுமைக்கும் உமது செல்வத்திற்கும் சாட்சியம் கூறுகின்றேன்.**

**ஆபத்தில் உதவுபவரும், தனித்து இயங்கவல்லவருமான இறைவன் உம்மையன்றி வேறெவருமிலர்.”[20]**

9. இப்பிரார்த்தனையில் நாம் எதற்குச் சாட்சியம் கூறுகின்றோம்? ____________________________

______________________________________________________________________________

## பகுதி 10

கட்டாயப் பிரார்த்தனை குறித்த சட்டத்திற்குக் கீழ்படிவதால் நாம் பெறும் ஆசிகளுடன் தனிப்பட்ட முறையில் நாம் கூறும் மற்ற பிரார்த்தனைகள் மூலம் நாம் பெறும் ஊட்டத்திற்கும் கூடுதலாக, பெரிய அல்லது சிறிய ஒன்றுகூடல்களில் நாம் பிரார்த்தனைகளைச் செவிமடுக்கும்போது நமது ஆன்மாக்கள் ஊக்கம் பெறுகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பஹாவுல்லா நமக்குக் கூறுவது:

**“பெரும் களிப்போடும் தோழமையுடனும் ஒன்றுகூடி, கருணைமிகு பிரபுவானவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள வாசகங்களை ஒப்புவிப்பீராக. அவ்வாறு செய்வதன் மூலம் உண்மை அறிவெனும் கதவுகள் உங்கள் உள்ளார்ந்த ஜீவனுக்குத் திறக்கப்படும்; பின்னர், உங்கள் ஆன்மாக்களுக்குப் பற்றுறுதி வழங்கப்படுவதையும், உங்கள் உள்ளங்கள் பிரகாசமிகு களிப்பினால் நிறைந்திருப்பதையும் நீங்கள் உணர்வீர்.”[21]**

உலகம் முழுவதும் கடவுளுடன் தொடர்புகொள்ள நண்பர்களும் அண்டையர்களும் ஒன்றுகூடும் கூட்டங்கள் ஆயிரக்கணக்கில் பன்மடங்காகி வருகின்றன எனும் செய்தியால் நாம் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். உலக நீதிமன்றம் எழுதுகின்றது:

**“வழிபாட்டுக் கூட்டங்கள், எந்த ஆன்மாவும், கலந்துகொள்ளக் கூடியவையாகும். அவை தெய்வீக நறுமணங்களைச் சுவாசித்து, பிரார்த்தனையின் இனிமையினை அனுபவித்து, படைப்பாற்றல் மிக்க வார்த்தைகளின் மீது தியானித்து, ஆவியெனும் சிறகுகளினால் ஏந்திச் செல்லப்பட்டு, ஒரே அன்புக்கினியவரோடு தொடர்புகொள்வதற்குமான தருணங்களாகும். குறிப்பாக, இத்தகைய நேரங்களில் இயல்பாகவே நிகழும் ஆன்மீக ரீதியில் மேலோங்கிய உரையாடல்களின்போது, தோழமை உணர்வும், ஒன்றுபட்ட நோக்கமும் உருவாக்கப்பட்டு, அதன் மூலமாக "மனித உள்ளமெனும் மாநகரம்" திறக்கப்படவும் கூடும்.”[22]**

பிரார்த்தனை செய்திட உந்தப்படும் முன் இவ்வுலக விஷயங்களில் இருந்து நாம் நம் மனதைத் தூய்மைப் படுத்துவதற்காகச் சிறிது நேரம் காத்திருக்கின்றோம். நாம் பிரார்த்தனை செய்யும் போது நமது எண்ணங்களைக் கடவுள் மீது மையப்படுத்தப்படுகின்றது. பிரார்த்தனை கூறி முடிந்த பின் நாம் அமைதியாக இருக்க வேண்டும். உடனடியாக வேறு வேலைக்கு எழுந்தோடக் கூடாது. ஒரு கூட்டத்தில் மற்றவர் பிரார்த்திக்கும் போது இதே பழக்கத்தைதான் நாம் பின்பற்ற வேண்டும். அவ்வேளைகளில் நாம் பிரார்த்தனை மனப்பான்மையுடன் இருந்து கூறப்படும் வார்த்தைகளை நாமே கூறுவது போன்று அவற்றை அணுக்கமாக செவிமடுக்க வேண்டும்.

1. கடவுளின் வாசகங்களை ஒப்புவிக்க நாம் எந்த உணர்வோடு ஒன்றுகூட வேண்டும்?

____________________________________________________________

2. கடவுளின் வாசங்களை ஒப்புவிப்பதற்காக நாம் ஒன்றுகூடும் கூட்டங்களின் விளைவு யாதாக இருக்கும்? ____________________________________________

____________________________________________________________

____________________________________________________________

3. வழிபாட்டுக் கூட்டங்கள் எந்த ஆன்மாவும் பின்வருமாறு செய்யக்கூடிய தருணங்களாகும்

- ______________ ,
- ________________________ ,
- ________________________ ,
- ________________________ ,
- ________________________________ ,
- ________________________________ ஆகியன

4. வழிபாட்டுக் கூட்டங்களில் எவ்வித உணர்வுகள் பிறப்பிக்கப்படுகின்றன? ____________

____________________________________________________________

5. வழிபாட்டுக் கூட்டங்களில் இயல்பாகவே நிகழும் ஆன்மீக ரீதியில் மேலோங்கிய உரையாடல்களின் விளைவு யாது? ________________________________

____________________________________________________________

6. தனியாகவோ ஒரு கூட்டத்திலோ நாம் பிரார்த்திக்கும் போது நாம் வெளிப்படுத்த வேண்டிய மரியாதைமிகு மனப்பான்மை பற்றி சில வார்த்தைகள் எழுதவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 11

இந்த நூலின் முதல்  பாடப்பிரிவு, அனுதினமும் திருவாக்குகளிலிருந்து வாசகங்களைப் படித்து, அவற்றின் அர்த்தம் குறித்து சிந்திக்கும் பழக்கத்தின் மீது கவனம் செலுத்தியது. இங்கு நீங்கள் பிரார்த்தனையின் முக்கியத்துவத்தைப் பற்றி பிரதிபலித்துள்ளீர்; அதன் விளைவாக, அனுதினுமும் பிரார்த்திக்கும் பழக்கத்தை வலுப்படுத்திக் கொண்டுள்ளீர். இதற்கு முந்திய பகுதி, சமூக வழிபாட்டின் முக்கியத்துவத்தின் மீது உங்கள் கவனத்தை ஈர்த்தது.  நீங்கள் இதுவரை படித்தவை அனைத்தும் சேவை பாதையில் ஒரு முதல் நடவடிக்கையான வழிபாட்டுக் கூட்டங்களை, நீங்கள் விரும்பினால், ஏற்பாடு செய்வதற்கு உங்களை ஆயத்தமாக்கியுள்ளது.

ஒரு முதல் படியாக, பல பிரார்த்தனைகளை மனனம் செய்யவும் சில நண்பர்களுடன் அவற்றைப் பகிர்ந்துகொள்ளவும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு நீங்கள் விரும்பலாம். அதே சமயம், உங்கள் சமூகத்தில் குறைந்தது ஒரு வழிபாட்டு கூட்டத்திலாவது நீங்கள் கலந்துகொண்டு, அதன் உற்சாகமான ஆதரவாளர்களுள் நீங்களும் ஒருவராகக் கணக்கிடப்படுவதை உறுதிசெய்துகொள்ளலாம். பிறகு, நீங்களே ஒரு வழிபாட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்திட விரும்பலாம்; அதற்கு உங்கள் நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், அண்டையர்கள் ஆகியோரை முறைமையான பிரார்த்தனை மற்றும் தோழமைக்கு அழைப்பு விடுக்கலாம். இத்தகைய வழிபாட்டுக் கூட்டத்தை இப்பயிற்சியின் பங்கேற்பாளர்கள் இரண்டு அல்லது மூன்று பேர் ஒன்றாக ஆரம்பிப்பது இயல்பான ஒன்றாகும்.

ஒரு வழிபாட்டுக் கூட்டம் எப்படி ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதற்கான சூத்திரங்கள் ஏதும் கிடையாது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், அது தெளிவாகவே நண்பர்களின் ஒன்றுகூடலாகும்; அதில் பிரார்த்தனைகள் கூறப்படும், திருவாக்குகளிலிருந்து மேற்கோள்கள் வாசிக்கப்படும், உற்சாகமூட்டும் உரையாடல்கள் நடைபெறும்; அவை அனைத்துமே ஒரு குறிப்பான ஆன்மீக சூழலில் நடைபெறும்.  ஒரு வழிபாட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்யும் சூழலில், பின்வரும் யோசனைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் சில வார்த்தைகளை உங்களால் கூற முடியுமா?

கனிவும் அன்பும் நிறைந்த அழைப்புகளை விடுத்தல்: ____________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

வரவேற்பு மிக்க சூழலை உருவாக்குதல்: ______________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

இறைபக்திமிக்க சூழ்நிலையைப் பேணுதல்: ___________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

மகிழ்ச்சிமிகு தோழமையை ஊக்குவித்தல்: ______________________________________________
__________________________________________________________________________________
__________________________________________________________________________________
__________________________________________________________________________________

ஆன்மீக ரீதியில் உற்சாகமூட்டும் உரையாடல்களை ஊக்குவித்தல்: ________________________
__________________________________________________________________________________
__________________________________________________________________________________
__________________________________________________________________________________

## குறிப்புகள்

1. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* CXXXVI, பத்தி. 4, பக். 105; பஹாய் பிரார்த்தனைகைள் பக். Iii'லும் காணப்படும்
2. *நம்பகம்*, பஹாவுல்லா: பஹாய் திருவாக்குகளிலிருந்து எடுபகுதிகளின் தொகுப்பு உலக நீதிமன்றத்தின் ஆய்வுத்துறையினால் தொகுக்கப்பட்டது. (லண்டன் பஹாய் பிரசுர காப்பகம்) எண். 21, பக். 5
3. *தெய்வீக அன்புக்கினியவரின் அழைப்புக் குரல்*: பஹாவுல்லாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட மர்ம படைப்புகள் (ஹைஃபா: பஹாய் உலக மையம், 2018), எண். 2.43, பக். 31
4. சர்வலோக அமைதியின் பிரகடனம் நூலில் பிரசுரிக்கப்பட்ட, 1912'இல் ஆற்றப்பட்ட உரை: 1912'இல் *ஐக்கிய அமெரிக்கா மற்றும் கெனடாவுக்கான அப்துல்-பஹாவின் விஜயத்தின் போது ஆற்றப்பட்ட உரை*,(வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2012)  பக் 127
5. பஹாவுல்லாவின் *மறை மொழிகள்* (வில்மட் பஹாய் பிரசுர காப்பகள் 2003,  2012 பதிப்பு), அரபு எண். 13, பக். 6-7.
6. ஷோகி எஃபென்டியின் சார்பாக 8 டிசம்பர் 1935'இல் எழுதப்பட்ட ஒரு கடிதம், *பிரார்த்தனை மற்றும் பக்திசார்ந்த வாழ்க்கை'யில் பிரசுரிக்கப்பட்டது: பாப் பெருமானார், பஹாவுல்லா, அப்துல்-பஹா ஆகியோரின் திருவாக்குகளிலிருந்தும், ஷோகி எஃபென்டியின் கடிதங்களிலிருந்தும், உலக நீதிமன்றத்தின் கடிதங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட எடுபகுதிகளின் தொகுப்பு,* உலக நீதிமன்றத்தின் ஆய்வுத்துறையினால் தொகுக்கப்பட்டது (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2019), எண். 71, பக். 31
7. அப்துல்-பஹாவின் திருவார்த்தைகள், *பஹாவுல்லாவும் புதிய யுகமும்*: பஹாய் சமயத்திற்கான ஓர் அறிமுகம் நூலில் J.E. எஸ்ஸல்மன்ட்'டினால் குறிக்கப்பட்டது (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2006, 2017 பதிப்பு), பக். 106
8. மேற்கண்டவாறு.
9. பஹாவுல்லா, *பஹாய் பிரார்த்தனைகள்*: *பாப் பெருமானார், பஹாவுல்லா, அப்துல்-பஹா ஆகியோர் வெளிப்படுத்திய பிரார்த்தனைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை* (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2002, 2017 பதிப்பு), பக். 7-8
10. மேற்கண்டவாறு., பக். 9.
11. அப்துல்-பஹாவின் திருவார்த்தைகள், *ஸ்டார் ஆஃப் த வெஸட்*, தொகுப்பு 8, எண் 4 (17 மே 1917) பக். 41
12. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* CXXXVI, பத்தி. 2, பக். 334; பஹாய் பிரார்த்தனைகைள் பக். iii'லும் காணப்படும்
13. பஹாவுல்லா, *பஹாய் பிரார்த்தனைகள்*, பக். 8-9
14. மேற்கண்டவாறு, பக். 12.
15. அப்துல்-பஹா, *பிரார்த்தனையும் பக்திசார்ந்த வாழ்க்கையும்*, எண். 24, பக். 7.
16. *சர்வலோக அமைதிக்கான பிரகடனம்* நூலில் அப்துல்-பஹாவின் உரையிலிருந்து, 5 ஆகஸ்ட் 1912, சர்வலோக அமைதிக்கான பிரகடனம் நூலில் பிரசுரிக்கப்பட்டது, பக். 345)
17. *அப்துல்-பஹாவின் திருவாக்குத் தேர்வுகளிலிருந்து*: (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2010 2015 பதிப்பு), எண். 22.1 பக். 75-76.
18. *பிரார்த்தனையும் பக்திசார்ந்த வாழ்க்கையும்* நூலில் பிரசுரிக்கப்பட்டது, ஷோகி எஃபென்டியின் சார்பாக எழுதப்பட்ட, 10 ஜனவரி என தேதியிடப்பட்ட கடிதத்திலிருந்து, எண். 61, பக். 25.
19. ஜனவரி 10, 1936 எனத் தேதியிடப்பட்ட கடிதத்திலிருந்து, *பஹாய் பிரார்த்தனைகள்* பக். 301'இல் குறிப்பிடப்பட்டது.
20. பஹாவுல்லா, *பஹாய் பிரார்த்தனைகள்* பக். 4.
21. பஹாவுல்லா, *பிரார்த்தனையும் பக்திசார்ந்த வாழ்க்கையும்*, எண். 68, பக். 29.
22. டிசம்பர் 29, 2015 எனத் தேதியிடப்பட்ட செய்தி, செயல்பாட்டிற்கான கட்டமைப்பு, உலக நீதிமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்திகளும், துணை உபகரணங்களும், 2006, 2016 பிரசுரிக்கப்பட்டது. (வெஸ்ட் பால்ம் பீச்: பாலாப்ரா பிரசுரம், 2017) எண். 35.49, பக். 232.



# வாழ்வும் மரணமும்

**நோக்கம்**

வாழ்க்கை என்பது இவ்வுலகின் மாற்றங்களிலும் சாத்தியங்களிலும் மட்டுமே அடங்கிய ஒன்றல்ல. ஆனால், அதன் உண்மையான முக்கியத்துவம் ஆன்மாவின் அபிவிருத்தியில் காணப்படும் என்பதை மதித்துணர்தல்

## பகுதி 1

மனித ஆன்மா பருப்பொருள் (material), பௌதீக உலகு ஆகியவற்றைவிட மேலானது. தமது உரை ஒன்றில் அப்துல்-பஹா பின்வருமாறு விளக்குகின்றார்:

**“இந்தப் பருப்பொருளிலான உடல்கள் அணுக்களின் இணைப்பாக்கம் (composed) ஆகும்; இந்த அணுக்கள் பிரிய ஆரம்பிக்கும் போது, அழிவு உண்டாகின்றது, பின்னர் மரணம் என்ற ஒன்று சம்பவிக்கின்றது....**

**“ஆன்மாவைப் பொறுத்தவரை, அது வேறுபட்டது. ஆன்மா தனிமங்களின் இணைப்பாக்கம் அல்ல. அஃது எண்ணற்ற அணுக்களின் இணைப்பாக்க அல்ல. அது ஒரே பிரிக்கப்பட முடியாத சாரப்பொருளாகும் (substance). ஆதலால் அது நித்தியமானது. அது பௌதீகப் படைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். அஃது இறப்பற்றது!”1**

1. “இணைப்பாக்கம்” எனும் சொல்லின் அர்த்தமென்ன? ________________________________________

2. மனித ஆன்மாவானது, பருப்பொருள் சார்ந்த உடல்களைப் போன்று பல்வேறு தனிமங்களால் ஆனதா? ________________________________________

3. மனித ஆன்மா ஒரு பௌதீக உருபொருளா? ________________________________________

## பகுதி 2

பாதுகாவலரின் சார்பாக எழுதப்பட்ட ஒரு கடிதம், “கருக்கொளலின் போது மனித ஆன்மா உருவாகிறது”2 என குறிப்பிடுகின்றது. இந்தக் “கருக்கொள்ளுதல்” எனும் சொல்லின் அர்த்தம் குறித்த ஒரு வினாவுக்குப் பதிலளிக்கையில், உலக நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

**“கருக்கொளல் (conception)” என வர்ணிக்கப்படும் ஒரு நிகழ்வின் உயிரியல் தருணத்தையும் இயல்பையும் குறிப்பாக வரையறுக்கும் எதுவும் பஹாய் திருவாக்குகளில் காணப்படவில்லை. மருத்துவ சூழலிலும் இவ்வார்த்தையின் பயன்பாடு தெளிவற்றதாக இருக்கின்றது. உண்மையில், கருக்கொளல் என்பதன் ஒரு புரிதல் அது கருவுறலுடன் (fertilization) ஒன்றாக நிகழ்வது என்பதாகும்; மற்றொன்று, அது கருவுறல், கருப்பதிப்பு (implantation) ஆகியவற்றைத் தொடர்ந்து வரும் கர்ப்பத்துடன் (pregnancy) தொடர்புடையதாகும். ஆதலால், பௌதீக உருவகத்துடனான ஆன்மாவின் தொடர்பு எப்போது நிகழ்கிறது என்பதை அறிவது இயலாததாகும். அவை ஆன்மீக உலகின் மர்மங்களுடனும் ஆன்மாவின் இயல்புடனும் தொடர்புடையதாக இருப்பதால் இத்தகைய கேள்விகள் மனித சிந்தனை அல்லது ஆராய்ச்சியினால் விடைகாண முடியாதவையாகும்.”[3]**

1. மனித ஆன்மா எப்போது உருவாகின்றது? ________________________________________
________________________________________

2. “கருக்கொளல்” எனும் சொல் ஒரு குறிப்பான உயிரியல் தருணத்தை வர்ணிக்கின்றதா?
________________________________________

## பகுதி 3

ஆன்மாவுக்கும் உடலுக்கும் இடையிலான தொடர்பு பருப்பொருள் (material) தொடர்பல்ல; ஆன்மா உடலுக்குள் நுழைவதுமில்லை அதைவிட்டு வெளியேறுவதுமில்லை, அது பௌதீக ரீதியில் இடங்கொள்வதுமில்லை. உடலுடனான அதன் தொடர்பு, ஒளியைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடிக்கும் அந்த ஒளிக்கும் இடையிலான தொடர்பைப் போன்றதாகும். கண்ணாடியில் தோன்றும் ஒளி அதன் உள்ளே இல்லை. அதே போன்று, ஆன்மாவும் உடலுக்குள் இல்லை. அப்துல்-பஹா குறிப்பிடுவதைப் போன்று,

> **"பகுத்தறிவார்ந்த ஆன்மா(rational soul) அல்லது மனித ஆவி, உள்ளார்ந்த நிலையில் (inherence) இந்த உடலினுள் வாழ்வதில்லை. அதாவது அஃது அதற்குள் பிரவேசிப்பதில்லை; ஏனெனில், உள்ளார்தலும், பிரவேசித்தலும் உடல்களின் பண்புக்கூறுகளாகும். பகுத்தறிவார்ந்த ஆன்மா இவற்றுக்கும் அப்பால் பரிசுத்தமானது. முதலாவதாக, அஃது இந்த உடலினுள் நுழையவே இல்லை. ஆதலால், அஃது உடலைவிட்டு வெளியேறும்போது அதற்கு வேறு இருப்பிடம் தேவையுமில்லை. அவ்வாறின்றி, உடலுடனான ஆன்மாவின் தொடர்பு இந்த விளக்கிற்கும் கண்ணாடிக்கும் இடையிலான தொடர்பைப் போன்றது. கண்ணாடி மெருகேற்றப்பட்டு பூரணமாக்கப்பட்டால், விளக்கின் ஒளி அதில் தோன்றும்; கண்ணாடி உடைந்தோ மாசுபடர்ந்தோ இருப்பின், ஒளி மறைக்கப்பட்டே இருக்கும்."[4]**

1. கீழ்காணப்படும் வாக்கியங்களின் காலியிடங்களைப் பூர்த்தி செய்யவும்.

   அ. பகுத்தறிவார்ந்த ஆன்மா, அல்லது ______________, உள்ளார்ந்த நிலையில் இந்த உடலினூடாக வாழ்வதில்லை, அதாவது அஃது அதற்குள் _________________.

   ஆ. ____________ _______________, அல்லது மனித ஆவி உடலுக்குள் நுழைவதில்லை; ஏனெனில், உள்ளார்தலும், பிரவேசித்தலும் ______________ ______________________, பகுத்தறிவார்ந்த ஆன்மா இவற்றிலிருந்து _________________.

   இ. ஆன்மா ________________________________________________, ஆதலால் அஃது உடலைவிட்டு வெளியேறும்போது அதற்கு வேறு இருப்பிடம் தேவையில்லை.

   உ. உடலுடனான ஆன்மாவின் தொடர்பு இந்த _________________ ________________________ இடையிலான தொடர்பைப் போன்றது

   ஊ. கண்ணாடி மெருகேற்றப்பட்டு பூரணமாக்கப் பட்டால், ______________________________ அதில் தோன்றும்

   எ. கண்ணாடி உடைந்தோ மாசுபடர்ந்தோ இருப்பின், _____________________________________. ___________________________________

2. நாம் இதுவரை கற்றவற்றிலிருந்து, பின்வருபவை சரியா என்பதைத் தீர்மானிக்கவும்:

   _____ ஆன்மா பௌதீக உலகைச் சார்ந்ததல்ல.
   _____ ஆன்மா உடலுக்குள் இருக்கின்றது.
   _____ உடலே ஆன்மாவின் உரிமையாளர்.
   _____ ஆன்மா இறப்பற்றது.

_____ ஆன்மா கருவோடு தொடர்புகொள்ளும் போது ஒரு தனிநபரின் ஆரம்பம் உண்டாகின்றது.
_____ ஒரு தனிநபர் இவ்வுலகில் பிறக்கும் போது வாழ்க்கை ஆரம்பமாகின்றது.
_____ ஒரு தனிநபரின் லௌகீக வாழ்வு மரணத்திற்குப் பின்னும் தொடர்கிறது.
_____ ஒவ்வொரு நாளும் நமக்கு நடக்கும் விஷயங்களையே வாழ்க்கை என கூறுகிறோம்.

3. ஒளி மற்றும் கண்ணாடியின் உருவகத்தைப் பயன்படுத்தி ஆன்மாவுக்கும் உடலுக்கும் இடையிலுள்ள உறவை வர்ணிக்கவும்: ______________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

## பகுதி 4

ஆன்மாவுக்கும் உடலுக்குமிடையே மிகவும் விசேஷமான ஓர் உறவு உள்ளது; அவை இரண்டும் ஒன்று சேர்ந்து மனிதனை உருவாக்குகின்றன. இந்த உறவு மரணம் வரையில் மட்டுமே நீடிக்கின்றது. அவற்றுக்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்படும் போது, அவை ஒவ்வொன்றும் அவற்றின் மூலநிலைகளுக்குத் திரும்பிவிடும்; உடல் மண்ணுலகிற்கும் ஆன்மா, அது தொடர்ந்து மேம்பாடு காணவிருக்கும் இறைவனின் ஆன்மீக உலகங்களுக்கும் திரும்பிச் செல்கின்றது. அப்துல்-பஹா கூறுகின்றார்:

**“மனித ஆவிக்கு ஆரம்பம் உண்டு. ஆனால், முடிவு கிடையாது: அஃது என்றும் நிலைத்திருக்கும்.”**[5]

தமது உரை ஒன்றில் அவர் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

**“ஆவிக்கு உடல் தேவையில்லை. ஆனால், உடலுக்கு ஆவி தேவைப்படுகின்றது; இல்லையெனில் அஃது உயிர்வாழ முடியாது. ஆன்மா உடலின்றி வாழமுடியும், ஆனால் ஆன்மாவின்றி உடல் உயிர்வாழ முடியாது.”**[6]

பாதுகாவலர் விளக்குகின்றார்:

**“மனிதனின் ஆன்மாவைப் பொறுத்த வரை: பஹாய் போதனைகளுக்கு ஏற்ப, மனித கருவின் உருவாக்கத்தின் போது மனித ஆன்மா ஆரம்பிக்கின்றது; உடலிலிருந்து அது பிரிந்த பிறகு, முடிவில்லா நிலைகளைக் கடந்து சென்று தொடர்ச்சியாக மேம்பாடு காண்கின்றது. ஆதலால், அதன் முன்னேற்றத்திற்கு எல்லையே கிடையாது.”**[7]

1. மேலே காணும் மேற்கோள்களை மனதில் வைத்து, பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்

அ. உடலுக்கு ஆன்மா அவசியமா? ______________________________________________

ஆ. ஆன்மாவுக்கு உடல் அவசியமா? ____________________________________________

இ. நாம் மரணிக்கும் போது ஆன்மாவுக்கும் உடலுக்கும் இடையிலான தொடர்பு என்னவாகின்றது? ______________________________________________

ஈ. மரணத்திற்குப் பிறகு ஆன்மாவுக்கு என்ன நிகழ்கின்றது? ____________________
______________________________________________________________

உ. ஆன்மாவின் முன்னேற்றம் எவ்வளவு காலம் நீடிக்கும்? ______________________
______________________________________________________________

ஊ. வாழ்க்கை எப்போது முடிகின்றது? ____________________________________
______________________________________________________________

2. இந்தப் பகுதிகளில் நாம் இதுவரை படித்துள்ளவற்றுடன் பின்வருவனவற்றுள் எவை இணக்கமாக இருக்கின்றன என்பதைத் தீர்மானிக்கவும்:

_____ மரணம் என்பது ஒரு தண்டனையாகும்.
_____ உடலுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான தொடர்பு இவ்வுலக வாழ்க்கை வரை மட்டுமே நீடிக்கின்றது.
_____ உடல் நித்தியமாக மேம்பாடு காணும் ஆற்றல் உடையது.
_____ ஆன்மா என்றும் நிலையாக முன்னேற்றம் காணும்.
_____ மரணத்தோடு வாழ்க்கை ஒரு முடிவுக்கு வருகின்றது.
_____ நமது உடல்கள் உயிர்த்தெழக்கூடிய தீர்ப்பளிக்கும் நாள் ஒன்று உள்ளது.
_____ மரணத்திற்குப் பிறகு ஆன்மாவிற்கு முன்பிருந்ததை விட அதிக சுதந்திரம் உண்டு.
_____ மரணத்தோடு வாழ்க்கை முடிகின்றது.
_____ நாம் மரணத்தைக் கண்டு பயப்பட வேண்டும்.
_____ ஆன்மாவுக்கு உணவு, உடைகள், ஓய்வு, போழுதுபோக்கு ஆகியவை அவசியம்.
_____ உடல் அதன் சக்தியைப் பயன்படுத்துவதால் ஆன்மா சோர்வடைகிறது.
_____ உடலுக்கு உண்டாகும் நோய் அல்லது பலவீனம் காரணமாக ஆன்மா பாதிக்கப்படுவதில்லை..
_____ மரணத்திற்குப் பிறகும் மனிதர்களுக்கு உடலியல் தேவைகள் உண்டு.

## பகுதி 5

பௌதீக உருபொருள்கள் போன்று ஆன்மா, பௌதீக ரீதியில் இடம் கொள்வதில்லை. அஃது இயற்கை விதிகளுக்கு ஏற்ப இயங்குவதில்லை என்பதை நாம் கண்டோம். ஆன்மா உடலின் செயலாண்மை வழி இந்த உலகில் செல்வாக்கு செலுத்துகின்றது. ஆனால், ஆன்மா அதன் செல்வாக்கைச் செலுத்துவதற்கு இது மட்டும் வழியல்ல. பஹாவுல்லா பின்வருமாறு பிரகடனம் செய்கிறார்:

**“மெய்யாகவே யான் கூறுகின்றேன், மனித ஆன்மா சகலவிதமான வெளியேறல், பின்செல்லல் ஆகியவற்றிற்கெல்லாம் மேலாக உயரிய நிலையில் உள்ளதாகும்.**

**அசையாதிருக்கின்றது; அதே வேளையில் அது வானளாவ பறக்கின்றது; நகர்கின்றது, ஆனால் அஃது அசைவதில்லை.”[8]**

அப்துல்-பஹாவும் நமக்குப் பின்வருமாறு கூறுகின்றார்:

**“மனித ஆன்மாவின் செல்வாக்கும் புலனுணர்வும் இருவிதமானவை என்பதை அறிவாயாக; அதாவது, ஆன்மா இரண்டு விதமாக இயங்குகின்றது, புரிதல் பெறுகிறது. ஒன்று, உடலியல் கருவிகள் மற்றும் உறுப்புகளின் இடையீடு மூலமானது. அவ்வகையில், அது கண்களைக் கொண்டு பார்க்கின்றது, காதுகளைக் கொண்டு செவிமடுக்கின்றது, நாவினைக் கொண்டு பேசுகின்றது...**

**“ஆன்மாவின் செல்வாக்கு மற்றும் செயல்பாடு மற்றொரு இயங்குமுறை, இத்தகைய உடலியல் கருவிகள்(bodily instruments) மற்றும் உறுப்புகளின்றி செயல்படுவதாகும்.[9]**

1. பின்வரும் வாக்கியங்களின் காலியிடங்களைப் பூர்த்தி செய்யவும்:

   அ. மனித ஆன்மா சகலவிதமான ____________________, ____________________ ஆகியவற்றிற்கெல்லாம் மேலாக உயரிய நிலையில் உள்ளதாகும்.

   ஆ. ____________________; அதே வேளையில் அது ________________________________.

   ஈ. ____________________, ஆனால் அது ____________________.

2 இவ்வுலகில் ஆன்மா உணரவும் செல்வாக்கு செலுத்தவும் கூடிய இரண்டு வழிகளை வர்ணிக்கவும்: ________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

3. உடலியல் கருவிகளின்றி (bodily instruments) ஆன்மாவின் செல்வாக்கு மற்றும் செயல்பாடு குறித்த உதாரணங்களை வழங்கமுடியுமா? ________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 6

கடந்த பகுதிகளில் உள்ள கலந்துரையாடல்களின் அடிப்படையில், பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து பின்வரும் உரைப்பகுதியைப் படிக்கவும்:

**“மனிதனின் ஆன்மா, அவனது உடல், உள்ளம் ஆகியவற்றின் பலவீனங்கள் அனைத்திற்கும் மேலாக உயர்ந்து, சுதந்திரமாக உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு நோயாளியினுள் வலுவின்மையின் அடையாளம் தோன்றுகின்றது என்றால், அதற்கு, அவனது ஆன்மாவுக்கும் உடலுக்கும் இடையே குறுக்கிடும்**

**இடைஞ்சல்கள்தாம் காரணமாகும். ஏனெனில், ஆன்மாவைப் பொறுத்தமட்டில், அஃது உடல் சம்பந்தப்பட்ட பிணிகளால் பாதிக்கப்படாமலேயே இருக்கும். ஒரு விளக்கின் ஒளியை எண்ணிப் பாருங்கள். புறப்பொருள் ஒன்று அதன் பிரகாசத்தினைத் தடுத்திடினும் அதன் வெளிச்சம் தொடர்ந்து சக்தி குறையாது பிரகாசித்திடும். அதே போன்று, மனிதனின் உடலைப் பாதிக்கும் ஒவ்வொரு வியாதியும், அவ்வான்மாவை அதன் உள்ளார்ந்த ஆற்றலையும் சக்தியையும் வெளிப்படுத்துவதிலிருந்து தடுத்திடும் ஓர் இடையூறாகி விடுகின்றது. இருப்பினும், அஃது உடலை விட்டுப் பிரியும்போது, உலகிலுள்ள சக்தி எதுவுமே அதற்கு ஈடாகாத அளவு, அத்துணைத் தாக்கத்தை வெளிப்படுத்திடும். தூய்மையும் புனிதமுமான ஒவ்வோர் ஆன்மாவும் பேராற்றல் மிக்கச் சக்தி அருளப்பட்டு, அளவற்ற மகிழ்ச்சியில் களிப்புற்றிடும்.”[10]**

1. ஆன்மாவானது, எவ்வாறு உடல், மனம் ஆகியவற்றின் ஊனங்களினால் பாதிக்கப்படாமலேயே இருக்கும் என்பதையும், அஃது உடலிலிருந்து பிரியும் போது என்ன வெளிப்படையாக்கப்படும் என்பதையும் உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்கவும்.

   ________________________________________
   ________________________________________
   ________________________________________
   ________________________________________
   ________________________________________
   ________________________________________
   ________________________________________
   ________________________________________

2. நமது பௌதீக உடலின் மறைவுக்குப் பின்னர் நமது தனித்தன்மையை நாம் தொடர்ந்து பெற்றிருப்போமா? ________________________________________

## பகுதி 7

பஹாவுல்லா நமக்குப் பின்வருமாறு கூறுகிறார்:

**"இப்பொழுது, இறப்புக்குப்பின் மனிதனது ஆன்மாவின் நீடிப்புச் சம்பந்தமான உங்கள் கேள்வி குறித்து; ஆன்மாவானது, உடலிலிருந்து அதன் பிரிவுக்குப் பின், காலங்கள், நூற்றாண்டுகள், ஆகியவற்றின் புரட்சியோ இவ்வுலகின் மாற்றங்களோ தற்செயல் நிகழ்வுகளோ அதனை மாற்றவியலாத நிலையில், தொடர்ந்து, இறைவனின் முன்னிலையை அடையும்வரை வளர்ச்சி பெற்றுவரும் என்ற உண்மையினை நீங்கள் அறிவீராக. இறைவனின் இராஜ்யம், அவரது மாட்சிமை, அவரது அரசாட்சி, அதிகாரம் ஆகியவை நிலைத்திருக்கும் வரை, அதுவும் நிலைத்திருக்கும். அஃது ஆண்டவனின் அடையாளங்களையும், அவரது பண்புகளையும் வெளிக்கொணர்ந்து, அவரது அன்புக் கருணை, வள்ளன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தும்."[11]**

1. பௌதீக மரணத்திற்குப் பின் எவ்வளவு காலத்திற்கு ஆன்மா தொடர்ந்து முன்னேற்றம் அடையும்? ______________________________________________________________

______________________________________________________________

2. பௌதீக மரணத்திற்குப் பின் எந்நிலையில் ஆன்மா அதன் நித்திய பயணத்தைத் தொடரும்?

______________________________________________________________

______________________________________________________________

3. அந்த நிலையில் ஆன்மா வெளிப்படுத்தக்கூடிய சில பண்புகள் மற்றும் அடையாளங்கள் யாவை? ______________________________________________________________

______________________________________________________________

4. நாம் இதுவரை பயின்றுள்ளவற்றின் அடிப்படையில், பின்வருபவை உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்:

____ கடவுளின் இராஜ்யம் என்றும் நிலையானது.
____ கடவுளின் பண்புகளை வெளிப்படுத்தும் திறனாற்றல் ஆன்மாவுக்கு உண்டு.
____ இறந்தோருக்காக நாம் கூறும் பிரார்த்தனைகள் அவர்கள் ஆன்மாவின் முன்னேற்றத்தில் எவ்வித விளைவையும் ஏற்படுத்தாது.
____ ஆன்மா என்றுமே அழிவில்லை.

## பகுதி 8

பஹாவுல்லா பிரகடனப்படுத்துகின்றார்:

**"செவிமடுக்கும் ஒவ்வொரு செவியும் தூய்மையாகவும் கறைபடியாமலும் வைக்கப்பட்டிருந்தால் அஃது எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு திசையிலிருந்தும் கீழ்காணும் புனித சொற்களை உச்சரிக்கும் குரலைச் செவிமடுக்க வேண்டும் என்பதை அறிவாயாக. "மெய்யாகவே, யாம் இறைவனைச் சார்ந்தவர்கள்; அவரிடமே யாம் திரும்பிச்செல்வோம்." மனிதனுடைய பௌதீக மரணம் மற்றும் அவனுடைய திரும்புதல் ஆகியவற்றின் புதிர்கள் வெளிப்படுத்தப்படவில்லை, இன்னும் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளன.”**

**"மரணமானது, , ஒவ்வோர் உறுதிமிக்க நம்பிக்கையாளருக்கும் மெய்யாகவே வாழ்வெனும் கிண்ணத்தினை வழங்குகிறது. அஃது இன்பத்தை அளித்து, மகிழ்ச்சியினைத் தாங்கி வருகிறது. அது நித்திய வாழ்வெனும் பரிசினை அளிக்கிறது."**

**"ஒரே உண்மையான இறைவனை - அவரது மகிமை மேன்மைபடுத்தப்படுமாக - அறிந்து கொள்வது என்ற மனிதனின் இவ்வுலக வாழ்க்கை கனியைச் சுவைத்துள்ளோர் சம்பந்தமாக, மறுமையில் அவர்களது வாழ்க்கை நாம் வருணிக்க முடியாதவாறு**

**இருக்கின்றது. உலகங்கள் அனைத்தின் தேவரான இறைவனிடம் மட்டுமே, அதைப் பற்றிய மெய்யறிவு உள்ளது."[12]**

**அதீதரின் மைந்தனே! மரணத்தை உனக்கு மகிழ்ச்சியின் தூதனாக ஆக்கியுள்ளேன். நீ ஏன் வருந்துகிறாய்? ஒளியின் பிரகாசத்தினை உன்மீது விழுமாறு செய்துள்ளேன். அதிலிருந்து நீ ஏன் உன்னைத் திரையிட்டு மறைத்துக் கொள்கின்றாய்?[13]**

1. பின்வரும் கூற்றுகளில் எவை உண்மை?

____ மனிதனின் ஆன்மா கடவுளிடமிருந்து வருகிறது, அவரிடமே திரும்பிச் செல்லும்.
____ மரணத்திற்குப் பின் வரும் வாழ்க்கை பற்றிய அறிவனைத்தும் கடவுளிடமே உள்ளது.
____ தன்னம்பிக்கையுடைய நம்பிக்கையாளருக்கு மரணம்  வாழ்வாகும்.
____ மரணம் மகிழ்ச்சியின் தூதுவன்
____ மரணத்தின் மர்மங்கள் அனைவராலும் அறியப்பட்டுள்ளன.
____ நாம் வாழ்வின் அருட்கொடைகளைப் பொக்கிஷங்களாக மதித்திட வேண்டும், இருப்பினும் மரணத்தைக் கண்டு பயப்படக்கூடாது, ஏனெனில், அது மகிழ்ச்சியின் தூதுவனாகும்.
____ மரணத்திற்குப் பின் வரும் வாழ்க்கையைப் பற்றி நாம் அறிந்துகொள்வது முக்கியமல்ல.

2. இப்பொழுது, இப்பகுதிகளில் நாம் படித்துள்ளவற்றை மனதிற் கொண்டு, வாழ்க்கை, மரணம், உடல், ஆன்மா ஆகியன பற்றி ஒரு சிறு பத்தி எழுதவும்.

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

## பகுதி 9

அப்துல்-பஹா விளக்கமளிக்கின்றார்:

**"மனிதன் தன்னுடைய மனித வாழ்வின் ஆரம்பத்தில் கர்ப்ப உலகில் கருவாக இருந்தான். அங்கு மனித வாழ்வெனும் மெய்ம்மைக்கான தகுதியும், பேறும் பெற்றுக் கொண்டான். இவ்வுலகிற்கு அவசியமான சக்திகளை அவன் அந்த உலகில் பெற்றுக்கொண்டான். இவ்வுலகில் அவனுக்குக் கண்கள் தேவைப்பட்டன; அவற்றை அவன் கருவுலகில் பெற்றுக்கொண்டான். இவ்வுலகில் அவனுக்குச் செவிகள் தேவைப்பட்டன; அவற்றை அவன் அவ்வுலகில் பெற்றுக்கொண்டான். இவ்வுலகில் தேவைப்படும் சக்திகள் அனைத்தையும் அவன் கருவுலகில் பெற்றுக்கொண்டான். அவ்வுலகில் அவன் இவ்வுலகிற்காக ஆயத்தமானான். அவன் இவ்வுலகில் பிரவேசித்தபோது இவ்வுலக வாழ்விற்குத் தேவையான எல்லா சக்திகளையும் தான் பெற்றிருப்பதைக் கண்டான்; இவ்வுலக வாழ்விற்குத் தேவையான கைகால்களையும் உறுப்புகளையும் அவன் அவ்வுலகிலேயே பெற்றுக்கொண்டிருந்தான். "ஆகவே, இவ்வுலகில், அவன் மறுமையிலுள்ள வாழ்விற்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். இராஜ்ஜியத்தின் உலகத்தில் அவனுக்குத் தேவைப்படுகின்றவற்றை அவன் இங்குப் பெற்றுக்கொள்ள வேண்டும். இம்மண்டல வாழ்விற்குத் தேவைப்படும் சக்திகளை அவன் கருவுலகில் எவ்வாறு பெற்றுக்கொண்டானோ, அவ்வாறே இராஜ்ய உலகிற்குத் தேவையானவற்றை, அதாவது எல்லா தெய்வீகச் சக்திகளையும் அவன் இவ்வுலகிலேயே பெற்றுக் கொள்ளவேண்டும்."[14]**

1. பின்வருபவை உண்மையா இல்லையா என்பதைத் தீர்மானியுங்கள்:

   ______ இவ்வுலகிற்குத் தேவையான அனைத்துச் சக்திகளும் கருவுலகில் பெறப்படுகின்றன.
   ______ மறுமை உலக வாழ்விற்கு நாம் நம்மை ஆயத்தமாக்கிக்கொள்ள வேண்டியதில்லை.
   ______ இராஜ்ய உலகிற்குத் தேவையானவற்றை நாம் இங்கேயே பெற்றுக்கொள்ள வேண்டும்.
   ______ அடுத்த உலகிற்குத் தேவையான சக்திகளைப் பெற்றுக்கொள்வதே இவ்வுலக வாழ்வின் நோக்கமாகும்
   ______ ஒருவர் மரித்து தெய்வீக இராஜ்யத்திற்குப் போகும்போது உண்மையான வாழ்க்கை ஆரம்பிக்கின்றது.
   ______ உண்மையான வாழ்க்கை இவ்வுலகில் ஆரம்பித்து பௌதீக மரணத்திற்குப் பின் தொடர்கின்றது.

2. கருவுலகில் மனிதன் பெற்றுக்கொள்ளும் திறனாற்றல்களுள் சில எவை? ____________________

   ________________________________________________________________

3. மரணத்திற்குப் பின்வரும் வாழ்க்கைக்குத் தேவையான சில சக்திகள் எவை? ________________

   ________________________________________________________________

## பகுதி 10

பஹாவுல்லா பிரகடனப்படுத்துவதாவது:

**"இந்நாளில் இறைவன் மனிதனுக்காகப் பொழியும் அருள் வெள்ளத்தில் தனது பங்கை அடைய வேண்டியதே மனிதனின் பிரதான கடமையாகும். ஆகவே கொள்கலன், பெரியது சிறியது என எவருமே எண்ண வேண்டியதில்லை. ஒரு சிலரது பங்கு ஒரு மனிதனின் உள்ளங்கைக்குள் அடங்கலாம். வேறு சிலரின் பங்கு ஒரு கிண்ணத்தை நிரப்பலாம். இன்னும் சிலரது பங்கு ஒரு காலன் அளவும் (gallon-measure) இருக்கலாம்."[15]**

1. மேலே காணும் மேற்கோளின் அடிப்படையில், பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்:

அ. இந்நாளில் ஒவ்வொரு மனிதனின் கடமை என்ன? ______________________________

______________________________________________________________________

ஆ. நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள சில ஆசீர்வாதங்கள் யாவை? ________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

இ. மேற்கண்ட மேற்கோளில் குறிப்பிடப்படும் “கொள்கலன்” எனும் சொல் எதைக் குறிப்பிடுகின்றது? ______________________________________________________

______________________________________________________________________

ஈ. நமக்கு வழங்கப்பட்டுள்ள திறனாற்றலின் அளவு பெரியது சிறியது என நாம் ஏன் கருதக்கூடாது? ______________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

உ. கடவுள் அருளில் நமது பங்கைப் பெறுவதைத் தடுக்கும் சில விஷயங்கள் யாவை? ____

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

2. பின்வருவனவற்றுள் எவை உண்மை?

____ நமது திறனாற்றல் அளவில் பெரிது அல்லது சிறிது என்பது நாம் எத்துணை அறிவுத்திறம் மிக்கவர்கள் என்பதைக் குறிப்பிடுகின்றது.

____ கடவுளுக்குச் சேவையாற்றுவதில், நமது பலவீனங்களை மறந்து நமது முழு நம்பிக்கையையும் அவரில் வைக்க வேண்டும்.

____ கடவுள் நமக்கு வழங்கியுள்ள திறனாற்றல்களை இவ்வுலகில் நாம் மேம்படுத்திக்கொள்ளாவிட்டால் அடுத்த உலகை நாம் சென்றடையும் போது நமது ஆன்மாக்கள் பலவீனமாக இருந்திடும்.

## பகுதி 11

பஹாவுல்லா குறிப்பிடுகின்றார்:

**“ஆன்மாவின் இயல் தன்மையினைக் குறித்து என்னிடம் கேட்டிருந்தீர். ஆன்மாவானது ஆண்டவனின் ஓர் அடையாளமாகும் என்பதை அறிவீராக; அது ஒரு தெய்வீக இரத்தினக்கல்; கல்வியில் மிகச் சிறந்தோரும் அதன் மெய்ம்மையினைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டுள்ளனர்; ஒரு மனிதனின் அறிவாற்றல், அஃது எத்துணைக் கூர்மையானதாய் இருப்பினும், அதன் மர்மத்தினை விளக்கிடவே (unravel) இயலாது. படைப்போனின் சிறப்பினைப் பிரகடனம் செய்வதில், படைப்புப் பொருள்கள் அனைத்திலும் அதுவே முதன்மையானது, அவரது மகிமையைக் கண்டறிவதிலும், அவரது உண்மையினைப் பற்றிக்கொண்டு, பயபக்தியுடன் அவர்முன் தலைவணங்குவதிலும் அதுவே முதன்மையானது."[16]**

1. கோடிட்ட இடங்களை நிரப்புக:

அ. ஆன்மாவானது ஆண்டவனின் ஓர் ____________________.

ஆ. ஆன்மா ஒரு ________________________; கல்வியில் மிகச் சிறந்தோரும் அதன் __________________ புரிந்துகொள்ளத் தவறிவிட்டுள்ளனர்; ஒரு மனிதனின் அறிவாற்றல், அஃது எத்துணைக் கூர்மையானதாய் இருப்பினும், அதன் ______________________________________.

இ. படைப்போனின் ____________ பிரகடனம் செய்வதில், அதுவே ____________

ஈ. அவரது ____________ கண்டறிவதில் ஆன்மாவே முதன்மையானது.

உ. கடவுளின் உண்மையை ___________ ஆன்மாவே முதன்மையாது.

ஊ. பயபக்தியுடன் அவர்முன் ____________ ஆன்மாவே முதன்மையானது

2. பின்வருவனவற்றில் எது உண்மை?

____ “விளக்குதல்” (unravel) என்றால் ஒரு விஷயம் என்னவென்பதை அறிதல்.

____ மனித மூளையே படைப்பினங்கள் அனைத்திலும் கடவுளைக் கண்டுணரக்கூடியவற்றில் முதன்மையானது.

______ “கூர்மையான” என்றால் புத்திநுட்பமுள்ள.
______ கற்றறிந்த ஒருவரால் ஆன்மாவின் மர்மத்தைப் புரிந்துகொள்ள முடியும்.
______ பெரும் தத்துவஞானியரே கடவுளின் சிறப்பை வெளிப்படுத்திட இயலும்
______ ஆன்மாவை நம்மால் புரிந்துகொள்ளவே முடியாது என்பதால் அதைப்பற்றி சிந்திப்பது அவசியமல்ல.

## பகுதி 12

பஹாவுல்லா கூறுகிறார்:

**“நீங்கள், விண்ணுலகங்களின் பெரும்பரப்பினூடே, பூரண மகிழ்ச்சி பொங்கும் நம்பிக்கையுடன், தனது பலம் பொருந்திய இறக்கைகளின் முழு வலிமையுடன் உயர்ந்தெழுந்திடும் பறவையைப் போன்றவர்கள்; அதன் பசியைத் தணிக்க வேண்டிய கட்டாயத்தினால் அது கீழேயுள்ள தண்ணீரையும் களிமண்தரையையும் ஆவலுடன் நோக்கித் திரும்புகின்றது; அது தன் ஆசையின் வலையில் சிக்கிக் கொண்டபின், தான் எங்கிருந்து வந்ததோ அப்பிரதேசத்தை நோக்கிப் பறக்கச் சக்தியற்ற நிலையில் தன்னைக் காண்கின்றது; தனது கறைப்படுத்தப்பட்ட இறக்கையை அழுத்திடும் சுமையை உதறித்தள்ளுவதற்குச் சக்தியற்றிருக்கும் அப்பறவை, அதுவரை விண்ணுலகங்களின் வாசியாய் இருந்துவந்த அப்பறவை, இப்பொழுது மண்ணின்மீது உறைவிடந் தேட முயற்சிசெய்ய வேண்டியதாகி விட்டது. அதனால், எனது ஊழியர்களே, உங்களின் இறக்கைகளைக் கீழ்ப்படியாமை என்னும் களிமண், வீண் ஆசைகள் ஆகியவற்றைக் கொண்டு கறைப்படுத்திடாதீர்; அவற்றைத் தூசியினாலும் வெறுப்பினாலும் கறைப்படுத்த விட்டுவிடாதீர்; அதனால், நீங்கள் எனது தெய்வீக ஞானம் என்னும் வானத்தில் உயர்ந்தெழுவதிலிருந்து தடுக்கப்படாமல் இருக்கக்கூடும்."[17]**

1. கோடிட்ட இடங்களை நிரப்புக:

    அ. பஹாவுல்லா இத்திருவாசகத்தில் குறிப்பிடும் பறவை மனிதனின் ________________.

    ஆ. இப்பறவை ___________________ல் வசிக்கும்.

    இ. அதன் இறக்கைகள் கறைபடிந்திருப்பின், இப்பறவை இப்போது தனது உறைவிடத்தை ___________________ தேடக் கட்டாயப்படுத்தப்படுகின்றது.

2. இப்பொழுது பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்:-

    அ. ஆன்மாவின் "சிறகுகள்" எவ்வாறு "கறைபடியக்கூடும்"? ______________________________
    ______________________________________________________________________
    ______________________________________________________________________

    ஆ. ஆன்மாவின் சிறகுகளுக்குப் பாரமாக இருக்கும் “பூமியின் நீர், களிமண்” போன்ற சில சுமைகள் எவை? ______________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

இ. தெய்வீக அறிவெனும் சுவர்க்கங்களில் உயரப் பறப்பதிலிருந்து நம்மைத் தடுக்கக்கூடிய சில விஷயங்களைக் குறிப்பிடவும். ______________________________

____________________________________________________________

____________________________________________________________

ஈ. ஓர் ஆன்மா தனது தெய்வீக உறைவிடத்தை எக்காரணத்திற்காக இந்த உலகின் தூசிக்கு பண்டமாற்று செய்திடும்? __________________________________________

____________________________________________________________

____________________________________________________________

3. பின்வரும் கூற்றுகள் உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்.

_____ லௌகீகப் பற்றுகள் நமது ஆன்மீக மேம்பாட்டைத் தடைசெய்கின்றன.

_____ தெய்வீக அறிவெனும் சுவர்க்கங்களில் பறப்பதினின்று நமது வழிதவறல்களும் வீணாசைகளும் நம்மைத் தடுக்கின்றன.

_____ பொறாமையும் வெறுப்பும் மனிதனின் இயல்பான குணங்களாகும். அவை ஆன்மாவுக்கு ஒரு சுமையல்ல.

_____ இவ்வுலக விஷயங்களிலிருந்து நம்மைப் பற்றறுத்துக்கொள்வதன் மூலம் வானுலகங்களின் பரந்த வெளியெங்கும் பறப்பதினின்று நம்மைத் தடுக்கும் சுமைகளிலிருந்து நாம் விடுபடலாம்.

_____ ஆன்மாவின் இல்லம் இவ்வுலகில் உள்ளது.

## பகுதி 13

பஹாவுல்லா கூறுகிறார்:

**"உலகையும் அதனுள் வாழ்வன, ஊர்வன ஆகிய அனைத்தையும் படைத்து, அவர், தமது கட்டுப் படுத்தவியலாத, மாட்சிமை பொருந்திய கட்டளையின் தெளிவான இயக்கத்தின் மூலமாக மனிதனை மட்டுமே தேர்ந்தெடுத்து, அவனுக்குத் தம்மை அறிந்துகொள்ளும், அன்பு கொள்ளும் தனிச்சிறப்பையும் ஆற்றலையும் வழங்கியுள்ளார். படைப்பு முழுமைக்கும் உயிரளிக்கும் உந்துதல் சக்தியாகவும் அடிப்படை நோக்கமாகவும் கருதப்பட வேண்டிய ஆற்றல் இதுவே... ஒவ்வொரு தனிப்படைப்பின் மெய்ம்மையின் ஆழத்தினுள் அவர், தமது திருநாமம் ஒன்றின் பிரகாசத்தினைப் பாய்ச்சி, அதனைத் தமது தன்மைகளின் ஒளி ஒன்றினைப் பெறச் செய்துள்ளார். ஆனால், அவர், மனிதனின் மெய்ம்மையின் மீது மட்டும் தமது எல்லா நாமங்கள் மற்றும் பண்புகளின் பிரகாசத்தினை ஒரு கூறாக விழச் செய்து, அதனையே தம்மைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகவும் ஆக்கியுள்ளார். படைப்புப் பொருள்கள் மத்தியிலிருந்து மனிதனை**

**மட்டுமே தேர்ந்தெடுத்து, அவனை இம்மாபெரும் சலுகைக்கும், இவ்வழியாத வள்ளன்மைக்கும் உடையவனாக ஆக்கியுள்ளார்."[18]**

1. காலியான இடங்களை நிரப்பவும்.

அ. மனிதனுக்குத் தம்மை ______________________ தனிச்சிறப்பையும், ஆற்றலையும் கடவுள் வழங்கியுள்ளார்.

ஆ. ______________ தனிப்படைப்பின் மெய்ம்மையின் ஆழத்தினுள் அவர் தமது ______________ ஒன்றின் பிரகாசத்தினைப் பாய்ச்சி அதனைத் தமது ______________ ஒளி ஒன்றினைப் பெறச்செய்துள்ளார்.

இ. மனிதனின் மெய்ம்மையின் மீது மட்டும் தமது ______________, ______________, ஆகிய பிரகாசத்தினை ஒரு கூறாக விழச் செய்து, அதனையே தம்மைப் ______________ ஒரு கண்ணாடியாகவும் ஆக்கியுள்ளார்.

2. இப்பொழுது பின்வரும் கேள்விகளுக்குப் பதலிளிக்கவும்:

அ. கடவுளின் சில பண்புகளை உங்களால் குறிப்பிட இயலுமா? ______________

______________________________________________

______________________________________________

ஆ. மனித ஆன்மா பிரதிபலிக்கக்கூடிய கடவுளின் பண்புகள் சில யாவை? ______________

______________________________________________

______________________________________________

இ. இத்தன்மைகள் எவ்வாறு வெளிப்படுத்தப்படலாம்? ______________

______________________________________________

______________________________________________

ஈ. எந்த விசேஷ சலுகைக்கு மனிதன் தனிப்படுத்தப்பட்டுள்ளான்? ______________

______________________________________________

______________________________________________

3. பின்வருவனவற்றில் எவை உண்மை?

______ பிற படைப்பினங்களிலிருந்து மனிதன் தனிப்படுத்தப்பட்டவன் அல்ல.

______ கடவுளை அறிந்து அவர் மீது அன்பு செலுத்தும் திறனாற்றலே படைப்பு முழுமைக்கும் உயிரளிக்கும் உந்துதல் சக்தியாகவும் அடிப்படை நோக்கமாகவும் உள்ளது.

______ படைப்பினம் ஒவ்வொன்றின் மெய்ம்மையும் கடவுளின் பண்பு ஒன்றின் பெறுநராக இருக்கின்றது.

______ மனித ஆன்மா கடவுளின் எல்லா பண்புகளையும் பிரதிபலிக்க வல்லது.

## பகுதி 14

பஹாவுல்லா நம்மிடம் கூறுகிறார்:

**"இருப்பினும், தெய்வீக வள்ளன்மை என்னும் பகல் நட்சத்திரத்தினாலும், விண்ணுலக வழிகாட்டுதலின் தோற்றத்தினாலும், மனிதனின் மெய்ம்மைக்கு அளிக்கப்பட்டுள்ள இச்சக்திகள், மெழுகுவத்தியினுள் சுடரொளி மறைந்துகிடப்பது போலவும், ஒளியின் கதிர்கள் தீபத்தினுள் உள்ளார்ந்து இருப்பது போலவும், அவனுள் உள்ளுறையாக (latent) இருக்கின்றன. சூரியனின் ஒளியானது தூசிப் படலத்தினால் மறைக்கப் படுவது போலவே, களிம்பினால் மறைக்கப் பட்டிருக்கும் கண்ணாடியைப் போலவே, இச்சக்திகளின் பிரகாசங்களும் உலக ஆசைகளினால் மறைக்கப்படக் கூடும். மெழுகுவர்த்தியோ, தீபமோ, வெளிச் சக்தி எதனின் உதவியும் பெறாது, தானாகவே, தன்னைப் பற்றவைத்துக் கொள்ள முடியாது; அதே போன்று, கண்ணாடிக்கும் தானாகவே தன் கசடினை அகற்றிக் கொள்வது சாத்தியமன்று. பற்ற வைக்கப்படாத வரையில், அத்தீபம், ஏற்றப்படவே மாட்டாது என்பதும், அக்கண்ணாடியின் மீதுள்ள கசடு துடைத்தழிக்கப் பட்டாலொழிய அது, சூரியனின் பிரகாசத்தையும் ஒளியையும் பிரதிபலிக்கவே இயலாது என்பது தெளிவானது, ஐயமற்றது."[19]**

1. "உள்ளுறை" எனும் சொல்லின் பொருள் என்ன? ______________________________

______________________________________________________________

2. மனிதனின் ஆன்மாவினுள் உள்ளுறையாக இருக்கும் சக்திகள் சில எவை? ____________

______________________________________________________________

______________________________________________________________

3. விளக்கானது கொண்டிருக்கும் உள்ளார்ந்த தன்மை (potential) என்ன? ______________

______________________________________________________________

4. கண்ணாடியானது கொண்டிருக்கும் உள்ளார்ந்த தன்மை என்ன? ________________

______________________________________________________________

5. விளக்கானது ஒளி கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

______________________________________________________________

______________________________________________________________

6. கண்ணாடியானது ஒளியைப் பிரதிபலிக்க வேண்டுமென்றால் அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ____________________

7. விளக்கும் கண்ணாடியும் அவற்றின் உள்ளார்ந்த தன்மைகளைத் தாமாகவே வெளிப்படுத்த முடியுமா? ____________________

8. இந்த இரண்டு உதாரணங்களை, மனித ஆன்மாவின் நிலையுடன் நாம் எப்படித் தொடர்புப்படுத்தலாம்? ____________________

____________________

____________________

9. மனிதனுடைய ஆன்மா அதன் உள்ளார்ந்த தன்மையை வெளிப்படுத்தச் செய்ய யாரால் முடியும்? ____________________

____________________

## பகுதி 15

பஹாவுல்லா கூறுகிறார்:

**"பண்டைய திருவுருவானவரின் அறிவுக்கான நுழைவாயில் மனிதரின் பார்வைக்கு எக்காலமும் மூடப்பட்டே இருந்து வந்திருக்கின்றது, தொடர்ந்தும் மூடப்பட்டே இருந்துவரும். எந்த மனிதனின் அறிவாற்றலும் அவரது புனித அரசவைக்குள் என்றுமே நுழைவுபெற இயலாது. இருப்பினும், அவரது கருணையின் சான்றாகவும், அவரது அன்புப் பரிவுக்கு அத்தாட்சியாகவும், அவர், தனது தெய்வீக வழிகாட்டுதலின் பகல் நட்சத்திரங்களையும், அவரது தெய்வீக ஒருமையின் அடையாளங்களையும் வெளிப்படுத்தி, அப்புனித ஆன்மாக்களின் அறிவைத் தனது சொந்த அறிவுக்கு முழுதும் ஒத்ததாக விதித்துள்ளார். அவர்களை அறிந்து கொண்டோர் இறைவனையே அறிந்து கொண்டோராவர். அவர்களின் அழைப்பினைச் செவிமடுப்போர் இறைவனின் குரலைச் செவிமடுப்போராவர்; மேலும், எவரொருவர் அவரது வெளிப்பாட்டின் மெய்ம்மைக்குச் சாட்சி பகர்கின்றாரோ அவர் இறைவனின் மெய்ம்மைக்கே சாட்சிப்பகர்பவர் ஆவார்; யார் அவரிடமிருந்து அப்பால் திரும்புகின்றாரோ அவர் இறைவனிடமிருந்தே அப்பால் திரும்பியவர் ஆவார்; மேலும், அவர்களை நம்பாதவர் இறைவனையே நம்பாதவர் ஆவர்." அவர்கள் ஒவ்வொருவரும், இவ்வுலகை மேலுலக இராஜ்யங்களுடன் தொடர்புப்படுத்தும் இறைவனின் வழியாகவும், மண்ணுலக, மற்றும் விண்ணுலக இராஜ்யங்களிலுள்ள ஒவ்வொருவருக்கும் மெய்ம்மையை நிர்மாணிக்கும் அளவுகோலாகவும் ஆவர். அவர்களே மனிதரின் மத்தியில் இறைவனின் அவதாரங்கள், அவரது மெய்ம்மைக்குச் சான்றுகள், அவரது பேரொளியின் அடையாளங்கள்."[20]**

1. மேலே காணப்படும் மேற்கோளை மனதில் வைத்து, பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்:

அ. நாம் இறைவனை நேரடியாக அறிந்து கொள்ள இயலுமா? ____________________________

ஆ. அவ்வாறானால் இறைவனை நாம் எப்படி அறிந்து கொள்வது? ________________________

________________________________________________________________________

இ. தெய்வீக வழிகாட்டுதலின் பகல்நட்சத்திரங்கள் சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக:

________________________________________________________________________

________________________________________________________________________

ஈ. இறைவனுடைய அவதாரங்களின் குரல்களுக்குச் செவிசாய்த்த ஒருவர் யாருடைய குரலைச் செவிமடுத்தவராகின்றார்? ________________________________________________

________________________________________________________________________

உ. இறைவனுடைய அவதாரங்களின் அழைப்பிற்கு நாம் செவிசாய்க்கவில்லையெனில் யாரிடமிருந்து நாம் அப்பால் திரும்பிவிடுகிறோம்? __________________________________

________________________________________________________________________

2. கோடிட்ட இடங்களை நிரப்புக:

அ. பண்டைய திருவுருவானவரைப் பற்றிய அறிவு எனும் கதவு மனிதர்களின் முகங்களிலிருந்து எப்போதும் ________________ என்றென்றும் தொடர்ந்து ________________.

ஆ. எந்த மனிதனுடைய புரிதலும் ______________________________ எட்டவே முடியாது.

இ. இறைவன் தமது ________________ அடையாளமாகத் தமது அவதாரங்களை அனுப்பியுள்ளார்.

ஈ. இறைவனுடைய அவதாரங்கள் பற்றிய அறிவு ___________________________ _________________க்கு ஒப்பானது.

உ. அவர்களைக் அறிந்து கொள்பவர்கள் _______________________________________________.

ஊ. அவர்களது அழைப்பிற்குச் செவிமடுப்பவர் _________________________________________.

எ. அவர்கள் ஒவ்வொருவரும் ____________________________ இறைவனின் வழியாவர்.

3. பின்வருவனவற்றுள் எவை உண்மை?

_____ நாம் நமது சொந்த முயற்சியின் மூலமாக மட்டுமே ஆன்மீக வளர்ச்சி பெற இயலும்.

_____ கடவுள் நமக்கு சிந்தையை வழங்கியுள்ளார், நமது முன்னேற்றத்திற்கு அதுவே போதுமானது.

_____ கடவுள் அவதாரங்களை அறிந்துகொள்வதன் மூலம் நாம் ஆன்மீக மேம்பாடு காணலாம். அதற்கு மேற்பட்டு நாம் முயல வேண்டியதில்லை.

_____ கடவுளின் அவதாரங்களை அறிந்துகொள்வதாலும் அவர்களின் போதனைகளுக்கு ஏற்ப வாழ முயல்வதாலும் நாம் ஆன்மீக முன்னேற்றம் காண முடியும்.
_____ நாம் கடவுளை நேரடியாகத் தெரிந்துகொள்ளலாம்.
_____ மனிதன் கடவுளைப் போன்று ஆகிட முடியும்.
_____ கடவுள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவர்.
_____ நாம் கடவுள் அவதாரங்களின் சொற்களைச் செவிமடுக்கும் போது, நாம் கடவுளின் குரலையே செவிமடுக்கின்றோம்.

## பகுதி 16

பஹாவுல்லா பிரகடனப்படுத்துகின்றார்:

**“மனித இனத்தை, மெய்ம்மை என்னும் நேரான வழிக்கு அழைத்துச் செல்லும் ஒரே நோக்கத்துடன்தான் தீர்க்கதரிசிகளும் இறைவனின் தூதர்களும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். அவர்களின் வெளிப்பாட்டிற்கான அடிப்படை நோக்கம், மனிதர்கள் அனைவருக்கும் கல்வி புகட்டுவதாகவே இருந்து வந்திருக்கின்றது; அதனால், மனிதர்கள், மரணம் எய்தும் வேளையில், அதி தூய்மையுடனும் புனிதத் தன்மையுடனும் முழுமையான பற்றின்மையுடனும் அதி மேன்மைமிக்கவரின் அரியாசனத்தை நோக்கி உயர்ந்தெழக் கூடும்."[21]**

மற்றொரு உரைப்பகுதியில் பின்வருமாறு கூறுகின்றார்:

**“மனிதனே அதிவுயரிய தாயத்து. இருப்பினும், தகுந்த கல்வியின்மை அவனை, தான் இயல்பாகக் கொண்டுள்ளவற்றை இழக்கச் செய்துள்ளது. இறைவனின் திருவாயினின்று வெளிவந்திட்ட ஒரே சொல்லின் மூலம் அவன் உருவாக்கப்பட்டான்; மேலும் ஒரு சொல்லின் மூலமாக, அவன், கல்வியின் தோற்றிடத்தை அறிந்துகொள்ள வழிகாட்டப்பட்டான்; மேலும் ஒரு சொல்லின் மூலமாக அவனது ஸ்தானமும் தெய்வநிர்ணயமும் (destiny) பாதுகாக்கப்பட்டுள்ளன. மேன்மைமிகு திருவுருவானவர் திருவாய் மலர்கின்றார்: மனிதனை விலை மதிப்பிடவியலாத இரத்தினங்களைக் கொண்ட சுரங்கமாகக் கருதுங்கள். கல்வி ஒன்றே, அதனைத் தன் பொக்கிஷங்களை வெளிப்படுத்தச் செய்து, மனிதனை அதிலிருந்து பயன்பெற உதவிடும். எந்த மனிதனாவது, இறைவனின் புனித விருப்பம் என்னும் சுவர்க்கத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட திருமறைகளில் வெளிப்படுத்தியுள்ளதனைத் தியானிப்பானாயின், அவற்றின் நோக்கம், மனிதர் அனைவரும் ஒரே ஆன்மாவாகக் கருதப்பட வேண்டும் என்பதை, அவன், தடையின்றி அறிந்து கொள்வான்; அதனால், “இராஜ்யம் இறைவனுடையதே” என்னும் வார்த்தைகளைக் கொண்ட முத்திரை ஒவ்வோர் உள்ளத்தின் மீதும் பொறிக்கப்படக்கூடும்; தெய்வீக வள்ளன்மை என்னும் ஒளி, அருள், கருணை ஆகியவை மனித இனம் முழுவதையும் சூழக் கூடும்."[22]**

1. எந்த நோக்கத்திற்காகக் கடவுள் அவதாரங்களும் தூதர்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்? ____________________________________________
____________________________________________
____________________________________________

2. அவர்கள் திருவெளிப்பாட்டிற்கு அடித்தலமாகவுள்ள நோக்கம் என்ன? ____________________
____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

3. "தாயத்து" எனும் சொல்லின் அர்த்தமென்ன? ______________________________
____________________________________________________________

4. முறையான கல்வியில்லாமையின் விளைவு என்ன? ___________________________
____________________________________________________________

5. முறையான கல்வி எதை விளைவித்திடும்? ________________________________
____________________________________________________________
____________________________________________________________

6. நமது கல்வியின் மூலாதாரம் எது? ___________________________________

7. நமக்கான தெய்வநிர்ணயம் எது? ____________________________________
____________________________________________________________

8. கல்வி வெளிக்கொணரும் சில இரத்தினங்கள் எவை? _________________________
____________________________________________________________

9. புனிதவாசகங்களின் மீது தியானிக்கையில் நாம் எதை எளிதில் கண்டு கொள்கின்றோம்?
____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

## பகுதி 17

பஹாவுல்லா குறுப்பிடுகிறார்:

**"மேலும், ஆன்மா உடலைவிட்டுப் பிரிந்தபின் அதன் நிலையைக் குறித்து என்னைக் கேட்டிருந்தீர். ஒரு மனிதனின் ஆன்மா இறைவன் வழியில் நடந்திருக்குமாயின், அது நிச்சயமாகத் திரும்பிச் சென்று, இறைவனின் பேரொளியினில் ஒன்று திரட்டப்படும் என்பதை, நீங்கள், மெய்யாகவே அறிவீராக."    இறைவனின் மெய்ம்மைத் தன்மை**

**சாட்சியாக! அது, எந்த ஓர் எழுதுகோலும் விவரிக்க இயலாத, எந்த ஒரு நாவும் வருணிக்க இயலாத ஸ்தானத்தை எய்திடும். ஆண்டவனின் சமயத்தில் விசுவாசத்துடன் இருந்து அவரது வழியில் தடுமாறாத உறுதியுடன் நிற்கும் அவ்வான்மா, மேலுலகை அடைந்தபின், அவர் மூலம், எல்லாம் வல்லவர் படைத்துள்ள உலகங்கள் அனைத்தும் பயன் பெறும் அளவு, சக்தி பெற்றிடும்."[23]**

1. கோடிட்ட இடங்களை நிரப்புக:

அ. ஒரு மனிதனின் ஆன்மா ஆண்டவனின் வழியில் சென்றிருந்தால் அது நிச்சயமாக ____
______________________________________________________________________
______________________________________________________________________

ஆ. அது எந்த ______________________________________________ இயலாத நிலையைச் சென்றடையும்.

இ. ________________________________ இருந்து ______________________ ______________________ நிற்கும் ஓர் ________________________________, ________________________________ உலகங்கள் அனைத்தும் அவர் மூலம் __________________________ அத்துணை ________________ பெறும்.

## பகுதி 18

பஹாவுல்லா நம்மிடம் கூறுகின்றார்:

**“ஓர் ஆன்மா, உடலைவிட்டுப் பிரியும் வேளையில், உலக மனிதர்களின் வீண் கற்பனைகளிலிருந்து தூய்மைபடுத்தப்பட்டிருக்குமாயின் அது பேறு பெற்றதாகும். அத்தகைய ஓர் ஆன்மா, அதன் படைப்போனின் விருப்பத்திற்கிணங்க வாழ்ந்து, இயங்கி, அதி மேன்மைமிகு சுவர்க்கத்தினுள் பிரவேசித்திடும். விண்ணுலகக் கன்னிகளும் அதிவுயரிய மளிகை வாசிகளும் அதனைச் சுற்றி வலம் வருவர்; இறைவனின் தீர்க்கதரிசிகளும் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டோரும், அதன் தோழமையை நாடுவர். அவ்வான்மா, அவர்களுடன் தடையின்றி உரையாடி, உலகங்கள் அனைத்தின் பிரபுவாகிய இறைவனின் பாதையில், அது சகிக்க வேண்டி இருந்தவற்றை எல்லாம் அவர்களுக்கு எடுத்துரைக்கும்.”[24]**

**“அவர் பாவியை மன்னிக்க வேண்டும்; என்றுமே அவனது தாழ்ந்த நிலையை இழித்துரைக்கலாகாது; ஏனெனில், தனது சொந்த முடிவு எவ்வாறிருக்கும் என்று யாருக்குமே தெரியாது. எத்தனை முறை பாவியொருவன், தான் சாகுந் தறுவாயில், நம்பிக்கையின் சாரத்தைப் பெற்று, நித்திய ஜீவநீரினைப் பருகி, விண்ணவர் கூட்டத்தின் முன்னிலைக்குச் சிறகடித்துப் பறந்திருக்கின்றான். அதே வேளையில், எத்தனை முறை பக்திமிக்க நம்பிக்கையாளன் ஒருவன் தனதான்மா பிரியும் வேளையில் நரகத் தீயில் விழுமளவு மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றான்.”[25]**

1. நமது ஆன்மா உடலை விட்டுப் பிரியும் வேளையில் அதன் நிலை எவ்வாறு இருக்கும்?
______________________________________________
______________________________________________

2. சில வீண் கற்பனைகள் எவை? ______________________________
______________________________________________
______________________________________________
______________________________________________

3. வீண் கற்பனைகளிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்டிருக்கும் ஆன்மா மரணத்திற்குப் பின் எந்த நிலையில் வாழவும் இயங்கவும் செய்யும்? ____________________
______________________________________________
______________________________________________
______________________________________________

4. இந்த ஆன்மாக்களின் தோழர்கள் யாராக இருப்பர்? ____________________
______________________________________________

5. இறைவனின் தீர்க்கதரிசிகளோடும் அவரால் தேர்ந்தெடுக்கப் பட்டோர்களுடனும் இத்தகைய ஆன்மா உரையாட இயலுமா? __________________________
______________________________________________

6. நமது உலக வாழ்வு எவ்வாறு முடிவுறும் என்பதை நாம் முன்கூட்டியே அறிவோமா? ___
______________________________________________

7. நமக்காக விதிக்கப்பட்டுள்ள நித்திய வாழ்வை அடைந்திட நாம் இப்பொழுது என்ன செய்யலாம்? ______________________________________
______________________________________________
______________________________________________

## பகுதி 19

அப்துல்-பஹா விளக்குகின்றார்:

**“மனித ஆன்மா இந்தப் பூத உடலைக் கைவிட்டபின் என்றென்றும் வாழ்கின்ற காரணத்தால், அஃது எல்லா படைப்புப் பொருள்களைப் போன்றே ஐயத்திற்கிடமின்றி**

**முன்னேற்றத்திற்கான திறனாற்றலைப் பெற்றுள்ளது; ஆதலால், மேம்பாடு காண்பதற்காகவும் மன்னிக்கப்படவும், அல்லது தெய்வீகத் தயவுகள், கொடைகள், அருள் ஆகியவற்றின் பெறுநராக ஆவதற்கும் ஒருவர் விண்ணேற்றம் அடைந்த ஓர் ஆன்மாவுக்காகப் பிரார்த்திக்கலாம். அதனால்தான், பஹாவுல்லாவின் பிரார்த்தனைகளில், மறுமை உலகிற்கு விண்ணேற்றம் அடைந்தோருக்காகக் கடவுளின் பிழைபொறுத்தலும் மன்னிப்பும் வேண்டப்படுகின்றது. மேலும், இவ்வுலகில் மக்களுக்குக் கடவுள் எவ்வாறு தேவைப்படுகின்றாரோ, அதே போன்று மறுமை உலகிலும் அவர்களுக்கு அவர் தேவைப்படுகிறார். படைப்பினங்களுக்கு என்றென்றும் தேவைகள் உள்ளன; இவ்வுலகாயினும், வரவிருக்கும் உலகாயினும், தேவைகளிலிருந்து கடவுள் முற்றிலும் சுதந்திரமாக உள்ளார்.”[26]**

விண்ணேற்றம் அடைந்த ஆன்மாக்களுக்காக நாம் ஏன் பிரார்த்திக்க வேண்டும்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 20

அப்துல்-பஹா கூறுகின்றார்:

**“மனித ஆன்மா இந்த நிலையற்ற புழுதிக் குவியலில் இருந்து உயர்ந்து, கடவுளின் உலகத்திற்கு எழும்போது, திரைகள் விலகும், உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும், முன்பு அறிந்திராத அனைத்தும் தெளிவுபடுத்தப்படும், மறைந்துள்ள உண்மைகள் புரிந்துகொள்ளப்படும்.**

**“எவ்வாறு ஒருவன், கருவுலகில் காது செவிடாகவும் கண் குருடாகவும் நா ஊமையாகவும் எவ்வித புலனுணர்வுமின்றி இருந்தான் என்பதை எண்ணிப் பாருங்கள்; ஆனால், அந்த இருளுலகிலிருந்து வெளிப்பட்டவுடன், இந்த ஒளியுலகிற்குள் பிரவேசித்தான்; அதன் பின் அவன் கண்கள் பார்க்கவும் காது செவிமடுக்கவும் நா பேசவும் ஆரம்பித்தன. அதே முறையில், மாள்வுக்குரிய இவ்வுலகிலிருந்து கடவுளின் இராஜ்யத்திற்குள் அவன் விரைந்து சென்றவுடன், அவன் ஆவியின் பிறப்பை எய்துகிறான்; பின்னர் அவனது புலனுணர்வின் கண்கள் திறக்கும், அவனது ஆன்மாவின் செவிகள் செவிமடுக்கும், அவன் முன்பு அறியாதிருந்த உண்மைகள் அனைத்தும் வெளிப்படையாக்கப்படும், தெளிவுபடுத்தப்படும்.”[27]**

1. கீழ்காணும் காலியிடங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. மனித ஆன்மா இவ்வுலகை விட்டகன்றவுடன்,

- திரைகள் ______________________ ,
- உண்மைகள் ____________________________ ,
- முன்பு அறியாதிருந்த அனைத்தும் _____________________________ ,
- மறைந்துள்ள உண்மைகள் ___________________________ .

ஆ. _____________ல் நாம் காது ________________ கண் ________________ நா _____________ இருந்தோம்.

இ. இவ்வுலகில் நாம் பிறந்தவுடன், கண்கள் _____________ காது _____________ நா _____________ ஆரம்பித்தது.

ஈ. அதே முறையில், கடவுளின் இராஜ்யத்திற்குள் நாம் பிரவேசித்தவுடன், நாம் _____________ _____________ எய்துகிறோம்.

உ. நமது _____________கண்கள் _____________, நமது _____________செவிகள் _____________, நாம் முன்பு அறியாதிருந்த _____________அனைத்தும் _____________, _____________."

2. பின்வரும் கூற்றுகள் உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்:

_____ நாம் கருவுலகில் இருக்கும் போது, இவ்வுலகைப் பற்றி அறிவோம்.
_____ மரணத்திற்குப் பின் நமது நிலை இவ்வுலக வாழ்வின் போது நமக்கு மறைக்கப்பட்டுள்ள ஓர் உண்மையாகும்.
_____ மரணத்திற்குப் பின் முற்றிலும் புதிய தொடுவானங்கள் நமக்குத் திறக்கப்படும்.
_____ நாம் இறந்தவுடன், மீண்டும் பிறப்பதற்காக இவ்வுலகிற்கே திரும்பி வருகின்றோம்.

## பகுதி 21

பஹாவுல்லா குறிப்பிடுகின்றார்:

**"இப்பொழுது, மனித ஆன்மாக்கள், உடலிலிருந்து பிரிக்கப்பட்ட பின்பும், தொடர்ந்து ஒன்றையொன்று அறிந்துகொள்ள முடியுமா என்ற உங்களது கேள்வி சம்பந்தமாக; செந்நிறக் கலத்தினுள் பிரவேசித்து, அதனுள் நிலைப்பெற்றுள்ள பஹாவின் மக்களது ஆன்மாக்கள் ஒன்றோடொன்று நெருங்கிப் பழகி, உரையாடி, அவர்களின் வாழ்க்கை, அவா, நோக்கம், முயற்சி ஆகியவற்றில் ஒரே ஆன்மாவைப் போல் நெருங்கிப் பழகுவர் என்பதை அறிவீராக. உண்மையாகவே, கூரிய நோக்குடையோர், புரிந்துகொள்ளும் ஆற்றல் வழங்கப்பட்டோர் ஆகிய அவர்களே பரந்த அறிவுபெற்றோர்; அவ்வாறாகத்தான் சகலத்தையும் அறிந்தவரும் சர்வ விவேகியுமான அவரால் விதிக்கப்பட்டுள்ளது.**

**"இறைவனது கலத்தின் வாசிகளாகிய பஹாவின் மக்கள் அனைவருமே, ஒருவர் மற்றவரின் தரத்தையும், நிலையையும் அறிந்திருப்பதோடு நெருங்கிய உறவு, சகோதரத்துவம் எனும் பந்தத்தில் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருப்பர். இருப்பினும், அவ்வாறான நிலை அவர்களது நம்பிக்கை, நடத்தை ஆகியவற்றைப் பொறுத்தே இருக்கும். தரத்திலும் அந்தஸ்திலும் சமமாக உள்ளவர்கள், ஒருவர் மற்றவரின் ஆற்றல், தன்மை, சாதனைகள், சிறப்புகள், ஆகியவற்றை அறிந்திருப்பர். ஆனால், தரத்தில் குறைந்தவர்கள், தங்களைவிட உயர்ந்த நிலையில் உள்ளவர்களின் ஸ்தானத்தைப் பொருத்தமுறப் புரிந்து கொள்ளவோ, அவர்களின் சிறப்பை மதிப்பிடவோ ஆற்றலற்றிருப்பர். உங்களின் பிரபுவிடமிருந்து ஒவ்வொருவரும் அவரவர் பங்கைப் பெற்றிடுவர். ஒரு மனிதர், அனைத்திற்கும் மாட்சிமை மிகு பிரபுவாகிய, அதி சக்தி வாய்ந்த, என்றும் மன்னிப்பவரான, கருணைமயமான இறைவனை நோக்கித் தனது ஆன்மா சிறகடித்துப் பறந்திடும் வரை தனது முகத்தை ஆண்டவன்பால் திருப்பி, அவரது அன்பில் பற்றுறுதியுடன் நடந்திருப்பாராயின், அவர், ஆசீர்வதிக்கப்பட்டவராவார்."[28]**

1. இவ்வுலகில் நாம் அறிந்திருந்தோரை நாம் அடுத்த உலகில் கண்டுகொள்வோமா? ___________
______________________________________________________________________________

2. அடுத்த உலகில் ஆன்மாக்களுக்கிடையிலான உறவு எவ்வளவு நெருக்கமாக இருக்கும்? _____
______________________________________________________________________________

3. அடுத்த உலகில் ஆன்மாக்களுக்கிடையிலான வேறுபாடுகளும் தனிச்சிறப்புகளும் எதைப் பொறுத்திருக்கும்? ______________________________________________________________
______________________________________________________________________________

4. கடவுளின் அருளைப் பெறாதவர் எவராயினும் இருப்பாரா? ________________________________

## பகுதி 22

பஹாவுல்லா நமக்கு அறிவுறுத்துகிறார்:

**"“எனது ஊழியர்களே! இந்நாளில், இவ்வுலகளவில், உங்களின் விருப்பத்திற்கு மாறானவை இறைவனால் நியமிக்கப்பட்டு வெளிப்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டு வருந்தாதீர்; ஏனெனில், பேரானந்தம், தெய்வீக மகிழ்ச்சி நிறைந்த நாள்கள், உங்களுக்கென நிச்சயமாகக் காத்துக் கொண்டிருக்கின்றன. புனிதமானதும், ஆன்மீக ஒளிமிக்கதுமான உலகங்கள் உங்கள் கண்களுக்குத் திறக்கப்படும். இவ்வுலகிலும் மறுவுலகிலும் நீங்கள் அவற்றின் நலன்களை அனுபவிக்கவும், அவற்றின் மகிழ்ச்சியில் பங்குப்பெறவும், அவற்றின் பேணும் அருளினில் ஒரு பகுதியைப் பெற்றிடவும், அவரால் விதிக்கப் பட்டுள்ளீர். அவை ஒவ்வொன்றையும் நீங்கள் அடைவீர்கள் என்பதில் ஐயமே கிடையாது.”[29]**

1. பின்வருபவை உண்மையா என்பதைத் தீர்மானியுங்கள்

- ______ விஷயங்கள் நமது விருப்பத்திற்கு மாறாக இருக்கும்போது நாம் வருத்தமடைய வேண்டும்.
- ______ நல்லதோ கெட்டதோ எல்லாமே இறைவனால் விதிக்கப்படுகின்றன.
- ______ பேரானந்தம் நிறைந்த நாள்கள் நமக்காகக் காத்திருக்கின்றன.
- ______ புனிதமான, ஆன்மீக ஒளி மிக்க உலகங்களை நாம் நிச்சயமாகக் காணவிருக்கின்றோம்.
- ______ இம்மையிலும் மறுமையிலும் புனிதமான, ஆன்மீக ஒளிமிக்க உலகங்களின் நன்மைகளை அனுபவிக்க நாம் விதிக்கப்பட்டுள்ளோம்.

2. நமது விருப்பத்திற்கு மாறானவை நிகழும்போது நாம் ஏன் வருந்தக்கூடாது? ________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

3. இவ்வுரைப்பகுதியில் பஹாவுல்லா நமக்கு என்ன வாக்குறுதியை வழங்குகின்றார்? _________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

## பகுதி 23

இப்பாடப்பிரிவில் மனித வாழ்வின் உண்மையான அர்த்தம் குறித்து நீங்கள் பிரதிபலித்துள்ளீர். ஆன்மாவின் இயல்பு, இவ்வுலக வாழ்க்கையின் நோக்கம், இவ்வுலகில் ஆன்மீகப் பண்புகளை வளர்ப்பதன் அவசியம், ஒளிமிக்க மகிழ்ச்சி நிறைந்த நித்திய வாழ்க்கைக்கான வாக்குறுதி ஆகியவை குறித்து நீங்கள் அதிகமாகவே கற்றுள்ளீர். இந்த நூலின் இரண்டாவது பாடப்பிரிவில், நமது சொந்த ஆன்மீக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியைப் பின்தொடர்வதற்கும், சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிப்பதற்கும் நாம் இரட்டை நோக்கத்தைப் பற்றி உரையாடினோம். இங்கு, ஆன்மாவின் மேம்பாடு குறித்து நீங்கள் அடைந்துள்ள நுண்ணறிவுகளின் அடிப்படையில் அதே கருத்தாக்கத்தின்பால் திரும்பி, இந்த நோக்கத்தின் இரண்டு அம்சங்களின் மீது கவனம் செலுத்தும் முக்கியத்துவம் பற்றி சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்பு இங்கு வழங்கப்படுகின்றது. குழுமத்தில் கீழ்காணப்படும் கருப்பொருள்கள் குறித்த ஒரு கலந்துரையாடல் மூலம் உங்கள் பிரதிபலிப்புகள் பயன்பெறலாம்.

1. *ஆன்மீகப் பண்புகளை வளர்த்தல்*
2. *கடவுளின் சட்டங்களுக்குக் கீழ்படிதல்*
3. *மனித இன நல்வாழ்வுக்குப் பங்களித்தல்*
4. *சேவை பாதையில் மேம்பாடு காணுதல்*

## குறிப்புகள்

1. *பாரீஸ் பேருரைகள்* நூலில் பிரசுரிக்கப்பட்ட 10 நவம்பர் 1911’இல் ஆற்றப்பட்ட உரையிலிருந்து: 1911’இல் அப்துல்-பஹா ஆற்றிய உரைகள் (வில்மட் பஹாய் பிரசுர காப்பகள் 2006, 2016 பதிப்பு) எண் 29.2-3, பக். 109)
2. *வழிகாட்டலுக்கான ஒளிகள்* நூலில் பிரசுரிக்கப்பட்ட, ஷோகி எஃபென்டியின் சார்ப்பாக 1 ஏப்ரல் 1946’இல் எழுதப்பட்ட கடிதத்திலிருந்து: ஒரு பஹாய் குறிப்பு ஆவணம் (புது டில்லி பஹாய் பிரசுர காப்பகம், 1988, 2010 பதிப்பு), எண் 1820, பக். 537.
3. உலக நீதிமன்றத்தின் சார்பான 28 ஜூலை 2016 எனத் தேதியிடப்பட்ட கடிதம்
4. அப்துல்-பஹா, *சில பதிலளிக்கப்பட்ட கேள்விகள்* (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2014, 2016 பதிப்பு) எண். 66.3 பக். 352-53
5. மேற்கண்டவாறு, எண். 38.5, பக். 220.
6. *பாரீஸ் பேருரைகள்*, 9 நவம்பர் 1911’இல் அப்துல்-பஹாவினால் ஆற்றப்பட்ட உரையிலிருந்து. எண். 28.16, பக். 104
7. ஷோகி எஃபென்டியின் சார்பாக 31 டிசம்பர் 1937 எனத் தேதியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்திலிருந்து, *வழிகாட்டுதலுக்கான ஒளிகள்* நூலில் பிரசுரிக்கப்பட்டது. எண். 680, பக். 204.
8. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 1983, 2017 பதிப்பு) LXXXII பக். 183
9. அப்துல்-பஹா, *சில பதிலளிக்கப்பட்ட கேள்விகள்*, எண். 61.1-2 பக். 334.
10. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, LXXX, பத்தி 2, பக். 174.
11. மேற்கண்டவாறு, LXXXI, பத்தி. 1, பக். 176.
12. மேற்கண்டவாறு, CLXV, பத்தி. 1-3, பக். 391-92.
13. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, (வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2003, 2012 பதிப்பு). அரபு எண். 32, பக். 11)
14. *சர்வலோக அமைதியின் பிரகடனம்* நூலில் பிரசுரிக்கப்பட்ட, 1912’இல் ஆற்றப்பட்ட உரை: 6 ஜூலை 1912’இல் ஐக்கிய அமெரிக்கா மற்றும் கெனடாவுக்கான அப்துல்-பஹாவின் விஜயத்தின் போது ஆற்றப்பட்ட உரை,(வில்மட் பஹாய் பிரசுர காப்பகம், 2012) பக் 315-316 (அதிகாரபூர்வ மொழிபெயர்ப்பு)
15. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, பக். V, பத்தி 4, பக். 8.
16. மேற்கண்டவாறு, LXXXII, பத்தி. 1, பக். 179-80.
17. மேற்கண்டவாறு, CLIII, பத்தி. 6, பக். 370-71.
18. மேற்கண்டவாறு, XXVII, பத்தி. 2, பக். 72â “73.
19. மேற்கண்டவாறு, XXVII, பத்தி. 3, பக். 73.
20. மேற்கண்டவாறு, XXI, பத்தி. 1, பக். 54-55.
21. மேற்கண்டவாறு, LXXXI, பத்தி. 1, பக். 177.
22. மேற்கண்டவாறு, CXXII, பத்தி. 1, பக். 293-94.
23. மேற்கண்டவாறு, LXXXII, பத்தி. 7, பக். 182.
24. மேற்கண்டவாறு, LXXXI, பத்தி. 1, பக். 176-77.
25. மேற்கண்டவாறு, CXXV, பத்தி. 3, பக். 300-1.
26. அப்துல்-பஹா, *சில பதிலளிக்கப்பட்ட கேள்விகள்*, எண். 62.3, பக். 340-41
27. *அப்துல்-பஹாவின் திருவாக்குகளிலிருந்து* (வில்மட் பஹாய் பிரசுரம், 2010, 2015 பதிப்பு) எண். 149.3-4, பக். 246-47)
28. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, பத்தி 1-2, பக். 192-93
29. மேற்கண்டவாறு, CLIII, பத்தி. 9, பக். 373.